பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 பங்குனி 11 திங்கட்கிழமை (24-03-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 117

# ஆயுதங்களுடன் கப்பல் இலங்கை நோக்கி விரைவு!

## விடுதலைப் புலிகளுக்கே ஏற்றி வருவதாகப் புலனாய்வுத் தகவல்

கொழும்பு, மார்ச் 24

ஆயுதக் கப்பல் ஒன்று இலங்கை நோக்கி வந்து கொண்டிருப்பதாகவும் --

அந்தக் கப்பல் விடுதலைப் புலிகளுக்கே ஐரோப்பிய நாடு ஒன்றிலிருந்து ஆயுதங்களை ஏற்றி வருவதாகவும் --

பிரஸ்தாப கப்பல் ஒருவாரத்திற்கு முன்னர் புறப்பட்டதாகவும்--

தமக்குத் தகவல்கள் கிடைத்திருப்பதாகப் புலனாய்வுத் துறையினர் பாதுகாப்பு அமைச்சை உஷார்ப்படுத்தி உள்ளனர்.

விடுதலைப் புலிகளிடம் உள்ள நான்கு வர்த்தகக் கப்பல்களில் ஒன்றே ஆயுதங்களுடன் ஐரோப்பிய நாடு ஒன்றில் இருந்து புறப்பட்டிருப்பதாகவும் புலனாய்வுத் துறையினர் தெரியப்படுத்தி உள்ளனர்.

இதேவேளை —

இலங்கை நோக்கி ஆயுதங்களுடன் வந்த கப்பல் ஒன்று தாய்லாந்து அதிகாரிகளால் அந்தமான் கடலில்வழி மறிக்கப்பட்டு அதிலிருந்த பத்துச் சிப்பந்திகள் கைது செய்யப்பட்டதாக பாங்கொக்கிலிருந்து வெளிவரும் 'தாய்லாண்ட் ரைம்ஸ்' பத்திரிகை இம் மாதம் 12 ஆம் திகதி செய்தி வெளியிட்டிருக்கிறது.

இது குறித்த தகவல் பாங்கொக்கிலிருந்து பாதுகாப்பு அமைச்சுக்குத் தெரியப்படுத்

(8 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



தொண்டாவுக்கு காலம் பிந்தி வந்த ஞானம் பாருங்கோ.....!

### சுதுமலையில் மோதல்

கொழும்பு, மார்ச் 24

நேற்று முன் தினம் சுதுமலையில் இடம்பெற்ற மோதலில் 40. மி. மீ. கைக்குண்டை ஏவும் கருவி, 4 தோட்டாக்கள், ஒரு கைக்குண்டு, 2 றொக்கட் குண்டுகள் ஆகியவற்றை படையினர் கைப்பற்றினர் என பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது. (இ-3)

### இனந்தெரியாத சடலம்

யாழ்ப்பாணம், மார்ச் 24

இனந்தெரியாத சடலம் ஒன்று சாவகச்சேரி பொலீஸாரினால் நேற்று முன்தினம் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

சடலத்தில் குண்டுச் சிதறல்களினால் ஏற்பட்ட காயங்கள் காணப்பட்டன. சுமார் 30 வயது மதிக்கத்தக்க இந்த இளைஞரின் சடலம் அடையாளம் காண்பதற்காக ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டது. [ஐ-15]

## வவுணதீவில் இன்னும் புதிய முகாம் இல்லை

கொழும்பு, மார்ச் 24

மட்டக்களப்பு வவுணதீவு இராணுவமுகாம் விடுதலைப் புலிகளால் தாக்கப்பட்ட பின்னர் அங்கு இன்னமும் முகாம் அமைக்கப்படவில்லை.

அங்கு அனுப்பப்பட்ட விசேட படையணி மட்டக்களப்பு விமான நிலையத்தை பாதுகாக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

மேற்கண்ட தகவலை கொழும்பு பத்திரிகை ஒன்று வெளியிட்டுள்ளது.

வவுணதீவு முகாம் தாக்கப்பட்ட பின்னர் அந்த முகாம் புதிதாக அமைக்கப்படவில்லை. அங்கு அனுப்பப்பட்ட விசேட படையணி 2 வாரமாக அங்கு தங்கியுள்ளது.

இந்த படையணி உடைந்த வலையிறவுப் பாலம் ஊடாக

( 8 ஆம் பக்கம் பார்க்க)

# காணாமற்போன எம்.ஐ.-24 ஹெலி புலிகளின் கைகளில் சிக்கியதா?

## வெளிநாட்டுவிமானிகளின்பங்கு குறித்துசந்தேகம்

கொழும்பு, மார்ச் 24

விமானப்படைக்கு சொந்தமான ரஷ்ய தயாரிப்பு எம். ஐ-24 ரக ஹெலிக்கொப்டர் கடலில் வீழ்ந்ததா? அல்லது அது புலிகளின் கைகளில் சிக்கியுள்ளதா?

இந்த 40 லட்சம் டொலர் பெறுமதியான கேள்விக்கு பதில்காண முடியாத நிலையில் இராணுவ உயர் தலைமைப்பீடமும், புலனாய்வுத் துறையும் உள்ளன என்று ''த ஐலண்ட்'' ஆங்கிலப் பத்திரிகையின் வார இதழ் கேள்வி எழுப்பி உள்ளது.

அப்பத்திரிகையின் பாதுகாப்புத்துறைக் கண்ணோட்டத்திலேயே இது குறித்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அக்கண்ணோட்டத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

#### புலிகளிடம் சிக்கி இருந்தால் பாரதூர விளைவு

விடுதலைப் புலிகளின் கைகளில் இந்தக் ஹெலி பூரணமான நிலையில் சிக்கியிருந்தால், அது பாரதூரமான விளைவுகளையே ஏற்படுத்தும். யுத்தத்தின் போக்கை அது திசை திருப்பிவிடும்.

புலிகள் அந்தக் ஹெலியைக் கைப்பற்றியிருந்தால் அதன் மூலம் கொழும்பு வந்து முக்கிய கேந்திர இலக்குகளை தாக்கலாம். ஜனாதிபதியின் உயிருக்கு இலக்கு வைத்து தாக்குதல் நடத்தும் சாத்தியமும் உண்டு. அல்லது வடக்கு கிழக்கில் உள்ள இராணுவ முகாம்கள் மீது தாக்குதல் நடத்தி நூற்றுக்கணக்கான படையினரைக் கொல்லவும் முடியும்.

ஜனாதிபதி மாளிகை, நாடாளுமன்றம், இராணுவ தலைமையகம், எண்ணெய்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## உடனடியாக இரு ஹெலிகளை கொள்வனவு செய்ய நடவடிக்கை

கொழும்பு, மார்ச் 24

விமானப்படைக்கு ஏற்பட்டுள்ள வானூர்தித் தட்டுப்பாட்டையடுத்து உடனடியாக இரண்டு எம். ஐ-24 ரக ஹெலிக்கொப்டர்களைக் கொள்வனவு செய்ய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

இலங்கை அரசாங்கம் ஏற்கனவே மூன்று எம்.ஐ.-24 ஹெலிக்கொப்டர்களை குத்தகைக்கு எடுத்திருந்தது.

அவற்றில் ஒன்றே கடந்த 19 ஆம் திகதி முல்லைத்தீவுப் பகுதியில் காணாமற் போயிருந்தது.

இந்தக் ஹெலிக்கொப்டர்கள ஒவ்வொன்றுக்கும் இலங்கை அரசு மாதாந்தம் 30 ஆயிரம் அமெரிக்க டொலர்களை வாடகையாக வழங்கி வந்தது. [இ-3-150]

## வீரவிலவில் உள்ளோரில் 24 பேர் விரைவில் விடுதலை

### புனர்வாழ்வு அதிகாரி தகவல்

கொழும்பு, மார்ச் 24

வீரவில புனர்வாழ்வு நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களில் திருமணமானவர்களான 24 பேர் விரைவில் விடுதலை செய்யப்படவுள்ளனர் என்று புனர்வாழ்வு திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வடக்கில் கைதான 88 பேர் வீரவில, விந்துறுவில் புன

(8 ஆம் பக்கம் பார்க்க)

## இ. தொ. கா. ஏன் தோல்வி அடைந்தது?

### தொண்டா தெரிவிக்கும் காரணம்

கொழும்பு, மார்ச் 24

''உள்ளூராட்சித் தேர்தலில் எமது கட்சியின் அணுகுமுறையே எமது கட்சிக்கு தோல்வி ஏற்படக் காரணம்.''

இப்படி இ.தொ.கா. தலைவர் அமைச்சர் தொண்டமான் கூறினார்.

எமது சின்னத்தில் போட்டியிட்டவர்களை ஆதரித்து வாக்களிக்க சிங்கள மக்கள் முன் வரவில்லை.

நாம் அரசை ஆதரிப்பதால் தமிழர்கள் பலர் வாக்களிக்க

( 8 ஆம் பக்கம் பார்க்க)

## கணேசலிங்கம் தலைமையில் போட்டியிட்டதாலேயே தோல்வி

### அரசியல் வட்டாரங்களில் கருத்து

கொழும்பு, மார்ச் 24

கொழும்பு மாநகர சபைத் தேர்தலில் பொ. ஐ. மு. சார்பிலான கணேசலிங்கம் தலைமையிலான சுயேச்சைக் குழு தோல்வியடைந்ததுக்கு சுகாதார அமைச்சர் பௌசி அதிர்ச்சி வெளியிட்டார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஆனந்த வசந்த நாணயக்கார தமைமையில் இத் தேர்தலில் போட்டியிட்

(8 ஆம்பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலயம் - 2 பாடசாலைகளின் உடற்பயிற்சிப் போட்டிகள்

## நாளை மறுதினம் கோப்பாயில் நடைபெறும்

யாழ். கல்வித்திணைக்களம் வலயம் இரண்டின் உடற்பயிற்சிப் போட்டி நாளை மறுதினம் காலை 9-30 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மைதானத்தில் வலயம் இரண்டின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் வீ. இராசையா தலைமையில் நடைபெறும்.

இப்போட்டியின் பிரதம விருந்தினராக யாழ். கல்வி வலயம் இரண்டின் கல்விப் பணிப்பாளர் சி. சிவராசா கலந்து கொள்வார்.

இந்த உடற்பயிற்சிப்போட்டியில் உப வலயங்களில் பங்குபற்றித் தெரிவுசெய்யப்பட்ட தலா நான்கு பாடசாலைகள் (ஒரு பிரிவில் எட்டுப்பாடசாலைகள் பங்கு பற்றும்) பங்குபற்றும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் சண்டிலிப்பாய், உடுவில், தெல்லிப்பழை, சங்கானை ஆகிய கல்விக் கோட்டங்கள் ஒரு உப வலயமாகவும் பருத்தித்துறை, கரவெட்டி, மருதங்கேணி, கோப்பாய் ஆகியனவேறொரு உப வலயமாகவும் போட்டிகள் நடைபெற்றன.

இந்தப் போட்டிகளில் பங்குபற்றவுள்ள பாடசாலை அணிகள் விவரம் வருமாறு.

### 17 வயது ஆண்கள் பிரிவு

★ கலட்டி றோ. க. த. க. பாடசாலை.
★ அச்சுவேலி மகா வித்தியாலயம்.
★ நெல்லியடி மத்தியமகா வித்தியாலயம்.
★ பரு. சித்திவிநாயகர் வித்தியாலயம்.
★ சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி.
★ சுதுமலை சின்மய பாரதி வித்தியாலயம்.
★ ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலை.
★ யூனியன் கல்லூரி.

### 17 வயது பெண்கள்

★ உடுவில்மகளிர்கல்லூரி.
★ இராமநாதன் கல்லூரி.
★ மானிப்பாய் மகளிர் கல்லூரி.
★ சுதுமலை சின்மயபாரதி வித்தியாலயம்.
★ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.
★ வட இந்து மகளிர் கல்லூரி.
★ சென்தோமஸ் றோ. க. பெண்கள் பாடசாலை
★ மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.

### 19 வயது ஆண்கள்

★ சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி.
★ புனித ஹென்றியரசர் கல்லூரி.
★ மானிப்பாய் இந்துக் கல்லூரி.
★ விக்ரோறியாக் கல்லூரி
★ விக்னேஸ்வராக் கல்லூரி.
★ உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி.
★ நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்
★ ஹாட்லிக்.கல்லூரி.

### 19 வயது பெண்கள்

★ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.
★ வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி.
★ வட இந்து மகளிர் கல்லூரி.
★ மெதடிஸ்த உயர்தர பெண்கள் பாடசாலை.
★ மானிப்பாய் மகளிர் கல்லூரி.
★ இராமநாதன் கல்லூரி.
★ உடுவில் மகளிர் கல்லூரி.
★ யூனியன் கல்லூரி.

ஒவ்வொரு வயதுப் பிரிவிலிருந்தும் முதல் இரண்டு இடங்கள் தெரிவு செய்யப்பட்டு இம்முறை மாகாண கல்வி அமைச்சினால் நடத்தப்படும் உடற்பயிற்சிப் போட்டிக்கு அனுப்பி வைக்கப்பட உள்ளன.

போட்டிக் குழுக்களுக்கான போக்குவரத்து வசதிகள் [illegible] செய்து கொடுக்கப்படவுள்ளதாக மாகாண கல்வி விளையாட்டு அமைச்சு அறிவித்துள்ளது.

## சாவற்காட்டைச் சேர்ந்தோர் இன்னும் வீடு திரும்பவில்லை

இம் மாதம் 17 ஆம் திகதி வள்ளங்களில் குடாக் கடலினூடாக குருநகர் இறங்குதுறையை வந்தடைந்து யாழ். சென்.ஜேம்ஸ் மகாவித்தியாலயத்தில் இராணுவத்தினரின் கண்காணிப்பில் வைக்கப்பட்டிருந்தோரில் சாவற்காட்டைச் சேர்ந்தோரைத் தவிர ஏனையோர் கடந்த வெள்ளிக்கிழமை தமது இல்லங்களில் குடியேற அனுமதிக்கப்பட்டார்கள்.

சாவற்காட்டைச் சேர்ந்தோருக்கும் வீடு செல்வதற்கான அனுமதியை இராணுவத்தினர் வழங்கியிருந்த போதிலும் இவர்களது கிராம சேவையாளர் வருகை தராததினால் இவர்கள் இப் பாடசாலையிலேயே தங்கியுள்ளார்கள்.

இவர்களுக்கான உணவு விநியோகம் மற்றும் பராமரிப்பு வேலைகளை குருநகர் கிராம சேவையாளர்களும், யாழ். கச்சேரி புனர்வாழ்வுப் பகுதியினரும் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறார்கள்.

(இ-51)

## திருமதி பரிமளகாந்தி சபாரத்தினம்

(இளைப்பாறிய ஆசிரியை)

அண்ணாமலை வீதி, சுதுமலை தெற்கைச் சேர்ந்த திருமதி பரிமளகாந்தி சபாரத்தினம் 22-3-97 சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விஸ்வநாதன் செல்லமுத்து தம்பதிகளின் அன்புப் புதல்வியும், சபாரத்தினம் (இளைப்பாறிய அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும், ஜெயக்குமார் (Haran International Colombo), உதயகுமார் (ஜேர்மனி), ராஜ்குமார் (ஹொலண்ட்), சூரியகுமார் (கனடா), ஜெயரூபி (Cidels Group Colombo), ஸ்ரீஸ்கந்தகுமார், கண்ணன்— 4 ஆம் வருடம் முகாமைத்துவம், யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கொழும்பில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
ச கண்ணன்
(மகன்)

மாணவர் விடுதி,
யாழ். பல்கலைக்கழகம்.

(45963)

## திருமதி கமலாவதி வேலுப்பிள்ளை

மூளாயைச் சேர்ந்த திருமதி கமலாவதி வேலுப்பிள்ளை 22 - 03 - 1997 அன்று சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் வேலுப்பிள்ளை (முன்னாள் கொத்தணி நிர்வாக அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கார்த்திகேயர் - செல்லம் அவர்களின் அன்பு மகளும், இராஜ்குமார் (விசேட முகாரி' மஸ்கன்ஸ் கொழும்பு), சூரியகுமார் (பொறியியலாளர், U.K) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கலைச்செல்வியின் அன்பு மாமியாரும், பிரசாந்தியின் பாசமிகு பேர்த்தியும், பத்மாவதி, லீலாவதி, கணேசானந்தன் (கொழும்பு), சிவதேவி, ஸ்ரீதேவி, ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற நாகலிங்கம் (முன்னாள் அலுவலக நிர்வாக உதவியாளர் - கூட்டுறவு திணைக்களம்), காலஞ்சென்ற நவரத்தினம் (பொலிஸ் உத்தியோகஸ்தர்), ரஞ்சினி, மாணிக்கவாசகர் (அதிபர், அ. த. க. பா. சிராட்டிக்குளம்), சிவதாசன் (ஆசிரியர், விக்ரோறியாக் கல்லூரி) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்,

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
நா. வேலுப்பிள்ளை
(கணவர்)

மூளாய் கிழக்கு,
சுழிபுரம்.

(45964)

## கலாநிதி (செல்வி) சிரோன்மணி இராஜரட்ணம்

(முன்னாள் ஆசிரியை - வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை, முன்னாள் விரிவுரையாளர் — பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, முன்னாள் கல்விப் பணிப்பாளர் — முல்லைத்தீவு, திருகோணமலை, ஒருங்கிணைப்பாளர் — இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரி திருகோணமலை).

அன்னார் வியாழக்கிழமை (20-03-1997) அன்று கொழும்பில் காலமானார். இறுதிக் கிரியைகள் இன்று திங்கட்கிழமை (24 - 03 - 1997) அவரது இல்லத்தில் (151/2, கொட்டா வீதி, கொழும்பு 8) நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: -
திருமதி ரஞ்சிதமணி நடராஜசுந்தரம்
(சகோதரி)

ஆறுமுகம் வீதி,
நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

(45967)

## மீள் குடியேற்ற அதிகார சபையின் தலைவருடன் கலந்துரையாடல்

### புதன், வியாழன், வெள்ளி நடக்கும்

வடக்கின் மீள் குடியேற்ற புனரமைப்பு அதிகார சபையின் தலைவர் சோமபால குணதீர மூன்று நாள் விஜயமாக நாளை மறுதினம் புதன்கிழமை யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளார்.

அவர் இங்கு தங்கியிருக்கும் நாள்களில் யாழ். மாவட்டத்தில் உள்ள பல்வேறு துறைகளையும் சார்ந்த பிரதி நிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடுவதற்கான விரிவான ஏற்பாடுகளை யாழ். அரச அதிபர் செ. பத்மநாதன் மேற்கொண்டுள்ளார்.

பின்வரும் நாள்களில் குறிக்கப்பட்ட துறைகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்துரையாடலில் பங்கு பற்ற அவர் ஏற்பாடுகளைச் செய்துள்ளார்.

**26 - 03 - 97 புதன்கிழமை**

★ விவசாயம்:- விவசாய, கமத்தொழில் சேவைகள். வனவளம், கால்நடை உற்பத்தியும் அதன் சுகாதாரமும், மீன்பிடி, நில அளவை, விலை மதிப்பு.

★ கைத்தொழில்:- சிறு கைத் தொழில்கள், கைத் தொழில் அபிவிருத்தி சபை, உப்பு உற்பத்தி, திக்கம் வடிசாலை, புடைவை, கைத்தறி, நெசவு.

★ கலாசாரம்:- சமய, கலாசார அலுவல்கள்

★ விளையாட்டு:- விளையாட்டு அபிவிருத்தி.

**27 - 03 - 97 வியாழன்**

★ கல்வி:- கல்வி வலயம் 1,2, சர்வகலாசாலை, தொழில்நுட்பக் கல்லூரிகள், ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகள், திறந்த பல்கலைக்கழகம்.

★ தொழிற்பயிற்சி:-தேசிய இளைஞர் சேவைகள், தொழிற் பயிற்சி, தொழில் திணைக்கள அலுவல்கள்.

★ வர்த்தகம்:- கூட்டுறவு மொத்த விற்பனவு நிறுவனம், சலுசலா, கட்டடப் பொருள்கள் கூட்டுத்தாபனம், அரச வர்த்தகக் கூட்டுத் தாபனம், வர்த்தகத் திணைக்களம், ப.நோ.கூ. சங்கங்களின் சமாசம், தனியார் வர்த்தக சங்கம், மருந்துப் பொருள்கள் வர்த்தக சங்கம், வெதுப்பக சங்கம், பாவனையாளர் பாதுகாப்புச் சங்கம், வங்கிகளும் காப்புறுதியும், உணவு பாதுகாப்பும் உணவு விநியோகமும், மீளக் குடியேறல் கொடுப்பனவு.

**28 - 03 - 97 வெள்ளி**

★ கட்டுமானம்:- வீதி அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கட்டடம், மாநகரசபை, நகர சபைகள், பிரதேச சபைகள், நீர் வள அபிவிருத்தி, உள்ளூராட்சித் திணைக்கள அலுவல்கள்.

★ சுகாதாரம்:- போதனா வைத்திய சாலை, பிராந்திய வைத்திய சாலைகள், மார்பு சிகிச்சை நிலையம், மலேரியா தடுப்பு, ஆயுர்வேத வைத்தியசாலை.

★ ஊடகம்:- புதினப் பத்திரிகை, மனித உரிமைகள், வானொலி, தொலைக் காட்சி.

★ ஏனையவை:- தபால், தொலைத் தொடர்பு, போக்குவரத்து (தரை, கடல்) பெற்றோலியக் கூட்டுத்தாபனம். (ஐ)

## அல்வாயில் இராணுவம் ஒருவர் பலி

அல்வாயில் இம்மாதம் பத்தொன்பதாம் திகதி புதன்கிழமை நடைபெற்ற சம்பவம் ஒன்றில் இராணுவத்தினர் ஒருவர் கொல்லப்பட்டார் என அறியவருகிறது.

அல்வாய் நாவலடிச் சந்தியில் இருந்து மாலுச்சந்தி முகாம் நோக்கிச் சென்று கொண்டிருந்த படையினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதாகவும் அப்போதே ஒருவர் மரணமானார் என்றும் மேலும் தெரிய வந்தது.

இறந்தவரிடம் இருந்த கைக்குண்டு ஒன்றை விடுதலைப் புலிகள் கைப்பற்றினர் என்று அவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (அ)

## ஓர் ஆசிரியர் அழுகிறார்!

### வாசகர் திருமுகம்

இன்று ஏடு தூக்கிச் செல்லும் மாணவன் நாளை நாடு காக்கும் தலைவன். இந்த ஆழமான கருத்துடைய வசனம் வெறும் அலங்கரிக்கப்பட்ட வாக்கியமோ என்று எண்ணுவதற்கு என்னைத் தூண்டிவிட்டவர்கள் வேறு யாரும் அல்லர்; நம் யாழ். பல்கலைக்கழக இளைஞர்கள்தாம். (பல்கலைக்கழக மாணவர் என அழைக்கப்படுவதற்கு தகுதியற்றோர்)

14-03-97 ஆம் திகதியன்று கலை வாரம் (Arts Week) நிகழ்ச்சிகளில் ஒன்றான ஆங்கில நாடகத்தை, பார்த்து ரசிக்கவென பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் கூடி இருந்தவர்களுள் நானும் ஒருவன். (நாடகத்தை வெளியாரும் பார்க்கலாம் என்பதால் நானும் போனேன்)

திடீரென அரங்கினுள் ஒரே கூச்சலும் குழப்பமும் உண்டானது. ''அடியடா அடியடா'' என்ற வாசகம் மேலோங்கியது. ஒரு வேளை 'பாம்போ' என்னவோ என்று முன்னால் இருந்த நான் பின்னால் திரும்பிப் பார்த்தபோது, பல இளைஞர்கள் ஒரு குறிப்பிட்ட மாணவனை நோக்கி வர முற்பட்ட போது சில மாணவர்கள் அவர்களைத் தடுத்தனர்.

உடனே குறிப்பிட்ட அந்த மாணவன் எழுந்து முன்னால் வர ஒரு மாணவி அவருக்கு இருக்க இடம்கொடுத்தார். மீண்டும் கூச்சல். காரணம்: அம் மாணவன் ''ராகிங்'' வேண்டாம் எனக் கூறி ''ராகிங்''கை வெறுக்கும் மாணவனாம். அதனால் நாடகம் பார்க்கக் கூடாதாம். எத்தனை அபத்தமான கருத்து என நான் யோசிக்கும் போதே அந்த மாணவனும் மாணவியும் அரங்கை விட்டு வெளியேறுமாறு கேட்கப்பட்டனர். ஒழுக்கமே பண்பான அவ்விருவரும் எதிர்ப் பேச்சு பேசாது இடத்தை விட்டு வெளியேறினர். அதன் பின்னர் தான் கூச்சல் போட்ட இந்த 'ஆவேசக்காரர்கள்' அடங்கினர்.

நல்ல சிந்தனை என்பது துளியும் இல்லாது அடாவடித்தனம் மூலம் அவ்விரு மாணவமணிகளையும் வெளியேற்றி இவர்கள் ஏதோ சாதனை படைத்து விட்டவர்கள் போல விசிலடித்தனர். (உண்மையில் சாதனை செய்தவனே மௌனமாகத்தான் இருப்பான்)

இவர்கள்தான் நாளைய நம் குழந்தைச் செல்வங்களை வழி நடத்தப் போகிறார்களாம்! தங்களையே வழி நடத்தத் தெரியாத இவர்களிடம் நம் பிள்ளைகளை ஒப்படைக்கலாமா? இவர்கள் திருந்தவே மாட்டார்களா?

க. சுப்பிரமணியம்
(ஆசிரியர்)

கொக்குவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேலியப் படையினர் அதி உஷார் நிலையில்!

# மேற்குக் கரையில் மோதல் வெடிக்கும் ஆபத்து?

ஹெப்ரோன், மார்ச் 24

இஸ்ரேலியப் படையினரும், யூதக் குடியேற்றக்காரர்களும் பலஸ்தீனியர்களால் சூழப்பட்டிருக்கும் மேற்குக் கரைப் பகுதியில் இருதரப்பினரிடையேயும் பெரும் மோதல் வெடிக்கும் சூழ்நிலை உருவாகி வருவதாக ஹெப்ரோனில் இருந்து வெளியான தகவல்கள் தெரிவிக்கின்றன.

கிழக்கு ஜெருஸலேமில் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதியில் யூதக்குடியேற்றத்தை அமைக்கும் திட்டத்தை இஸ்ரேல் ஆரம்பித்ததை அடுத்து எழுந்த பதற்ற நிலையை ரெல் அவிவ் நகரில் ஹமாஸ் தீவிரவாதிகள் நடத்திய தற்கொலைக் குண்டுத் தாக்குதல் மேலும் அதிகரிக்கச் செய்துவிட்டது.

சகல விதமான வன் முறைகளையும் எதிர்கொள்ளும் வகையில் இஸ்ரேலிய அரசு தனது படைகளை அதி உயர் உஷார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எத்தகைய வன்செயல்களும் வெற்றி பெற முடியாது என்று இஸ்ரேலியர்களும் — வன் முறைகள்வெடிப்பதை தடுப்பதுஎல்லாவேளையிலும் தம்மால் முடியாது என்று பலஸ்தீனியர்களும்பரஸ்பரம் தெரிவித்துவரும் நிலையில் பெரும் முறுகல் நிலை அங்கு உருவாகி வருகிறது.

இஸ்ரேலியப் படையினருக்கும் பலஸ்தீனியருக்கும் இடையே தொடரும் மோதல்களில் நூற்றுக்கு மேற்பட்ட பலதீனியர்கள் காயமடைந்துள்ளனர்.

கிழக்கு ஜெருஸலேமில் இஸ்ரேலியப்படையினரின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற யூதக் குடியேற்றக் காரர்கள் வாழும் பழைய நகரப் பகுதிக்குச் செல்லும் பிரதான வீதிகளை தடுத்து மூடும் நோக்கில் இஸ்ரேலிய பொலீஸார் நீண்ட வரிசையில் கைகோர்த்து நிற்கின்றனர்.

இஸ்ரேலிய நிலைகளை நோக்கி அலையாக முன்னேற முயலும் பலஸ்தீன இளைஞர்களைத் தடுத்து நிறுத்தவே பொலீஸார் மனித சுவரை அமைத்துள்ளனர். எனினும் ஆவேசமடைந்த பலஸ்தீனியர், பொலீஸர் மீது கற்களை வீசித் தாக்கி வருகின்றனர்.

## அரபாத் மீது குற்றச்சாட்டு சுமத்துகிறார் நத்தனியாகு



ரெல் அவிவ், மார்ச் 24

ரெல் அவிவ் நகரில் நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலைக் கண்டித்துள்ள இஸ்ரேலியப் பிரதமர் நத்தனியாகு ஹமாஸ் இயக்கத்தினரின் இத்தகைய எல்லாத் தாக்குதல்களுக்கும் பலஸ்தீன அதிபர் யஸீர் அரபாத்தே பொறுப்பேற்க வேண்டும் என்று குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதேவேளை —

இஸ்ரேலும் பலஸ்தீனமும் இன்னும் 6 மாத காலத்தில் நிரந்தர சமாதானத்துக்கான ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடவுள்ளன என்றும் நத்தனியாகு தெரிவித்திருக்கிறார். (ஐ)

## பாகிஸ்தானில் அரபாத்

ஜெருஸலேம், மார்ச் 24

இஸ்ரேலின் யூதக் குடியேற்றத் திட்டத்தைத் தடுக்கும் முயற்சியில் இஸ்லாமியநாடுகளின் தலைவர்களது ஆதரவைப் பெறும் நோக்கில் பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யஸீர் அரபாத் பாகிஸ்தான் சென்றுள்ளார். அங்கு நடைபெறும் உயர் மட்ட மாநாடு ஒன்றில் அவர் உரையாற்றியுள்ளார். (ஐ)

## காஷ்மீரில் 7 இந்துக்கள் படுகொலை

இந்தியாவின் காஷ்மீர் மாநிலத்தில் ஸ்ரீநகருக்கு அருகே உள்ள கிராமம் ஒன்றில் சிறுபான்மையினரான இந்துக்கள் ஏழு பேர் ஆயுதக் குழு ஒன்றினால் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இப்படுகொலைகளைப் புரிந்த குழுவினரை இந்தியப் பொலீஸாரும், பாதுகாப்புப் படையினரும் தேடிவருவதாக அறிவிக்கப்பட்டது. காஷ்மீர் தீவிரவாதிகளே இக் கொலைகளைப் புரிந்திருப்பதாகச் சந்தேகிக்கப்படுகிறது. (ஐ)

## குடியிருப்பை நிறுத்தும் வரை இஸ்ரேலை தாக்குவோம்!

### ஹமாஸ் இயக்கம் எச்சரிக்கை

ஹெப்ரோன், மார்ச் 24

யூதக் குடியிருப்பை அமைக்கும் திட்டத்தைக் கைவிடாத வரை இஸ்ரேல் மீது தொடர்ந்து தாக்கப் போவதாக பலஸ்தீனிய தீவிரவாதக் குழுவான ஹமாஸ் இயக்கம் எச்சரித்திருக்கிறது.

வெள்ளியன்று இஸ்ரேலியத் தலைநகர் ரெல் அவிவில் சிற்றுண்டிச் சாலை ஒன்றில் நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலுக்கு ஹமாஸ் இயக்கம் உரிமைகோரி உள்ளது. இத்தாக்குதலில் 2 இஸ்ரேலியர் கொல்லப்பட்டனர். 43 பேர் காயமடைந்தனர்.

இது ஒரு பயங்கரவாதச் செயல் என்று பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யஸீர் அரபாத் தெரிவித்திருந்தார். (ஐ)

## தேவகௌடா ரஷ்யா பயணம்

புதுடில்லி, மார்ச் 24

அதிபர் பொறிஸ் யெல்ட்சினின் அழைப்பை ஏற்று இந்தியப் பிரதமர் தேவகௌடா இன்று மொஸ்கோவுக்கு மூன்று நாள் விஜயத்தை மேற்கொண்டு அங்கு செல்கிறார்.

இரு நாட்டு விவகாரங்கள் தொடர்பான உச்சி மாநாட்டில் அங்கு அவர் கலந்து கொள்வார். (ஐ)

## ஐரோப்பிய ஒன்றியத்தில் சேர யெல்ட்சின் விருப்பம் தெரிவிப்பு



ஹெல்சிங்கி, மார்ச் 24

ஐரோப்பிய யூனியனில் ரஷ்யாவை இணைத்துக்கொள்ள அதிபர் பொறிஸ் யெல்ட்சின் விருப்பம் தெரிவித்திருக்கிறார்.

பின்லாந்து தலைநகர் ஹெல் சிங்கியில் அமெரிக்க அதிபருடனான உச்சி மாநாட்டின் முடிவில் தனது இந்த விருப்பத்தை அவர் அறிவித்தார்.

ரஷ்யா நாளடைவில் ஓர் முழு ஐரோப்பிய நாடாகக் கருதப்படுவதையே விரும்புவதாக அவர் தெரிவித்தார்.

ஐரோப்பிய யூனியனில் சேர்ந்து கொள்ள ரஷ்யா தெரிவித்திருக்கும் விருப்பம் குறித்து பரிசீலிக்கப்படும் என்று ஐரோப்பிய ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

விரைவில் நடைபெறவிருக்கும் ஐரோப்பிய யூனியனின் வெளிவிவகார அமைச்சர்கள் கூட்டத்தில் ரஷ்யாவின் யோசனை பரிசீலிக்கப்படவுள்ளது.

இதேவேளை —

நேட்டோ விரிவாக்கம் தொடர்பாக அமெரிக்க அதிபர் கிளின்ரனுடன் அதிபர் பொறிஸ் யெல்ட்சின் நடத்திய பேச்சுக்கள் முன்னேற்றம் எதுவும் எட்டப்படாமலேயே முடிவடைந்தன. (ஐ)

## ஹெலியில் இருந்து தவறி வீழ்ந்து பிலிப்பீன்ஸ் விஞ்ஞானி மரணம்

### தங்கச் சுரங்கத்தை கண்டு பிடித்தவர்

ஜகார்த்தா, மார்ச் 24

உலகில் மிகப்பெரிய தங்கச் சுரங்கத்தைக் கண்டு பிடித்த பிலிப்பீன்ஸ் விஞ்ஞானியான மைக்கல் குஸ்வான் அந்த தங்கச் சுரங்கத்துக்கு ஹெலிகொப்டரில் சென்று கொண்டிருந்த சமயம் ஹெலியின் கதவு தற்செயலாகத் திறக்கப்பட்டதால் அவர் வெளியே வீசப்பட்டு தரையில் வீழ்ந்து மரணமானார்.

சுமார் 800 அடி உயரத்தில் ஹெலிபறந்து கொண்டிருந்த போதே இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இந்தத் தங்கச் சுரங்கம் இந்தோனேஷியாவின் கிழக்குப் புறத்தில் உள்ள காலிமான் பிரதேசத்தில் அமைந்துள்ளது.

இந்த தங்கச் சுரங்கத்தில் சுமார் 2 லட்சத்து 25 ஆயிரம் கிலோ தங்கம் இருப்பதாகவும் அதன் பெறுமதி இரண்டாயிரத்து ஐநூறு கோடி டொலர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இது இந்த நூற்றாண்டில் கண்டுபிடிக்கப்பட்ட மிகப் பெரிய தங்கச்சுரங்கம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-10)

## உலக அரங்கில்

## ஆயுதங்கள் கையளிப்பு

டல் உல்ச்சி, மார்ச் 24

கௌத்தமாலாவில் உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு வந்து சமாதானம் மலர்ந்துள்ளதை அடுத்து 3 ஆயிரம் கெரில்லாக்கள் தங்கள் ஆயுதங்களை ஒப்படைத்துள்ளனர் நாட்டில் 8 இடங்களில் இந்த ஆயுதக்கையளிப்பு நடைபெற்றது. (ஐ)

## சீனாவுக்கு எதிராக மீண்டும் மனித உரிமை மீறல் தீர்மானம்

அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் இணைந்து ஐ. நாவின் மனித உரிமைக் கழகத்தில் சீனாவுக்கு எதிராக மனித உரிமை மீறல் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றப் போவதாகத் தகவல்கள் வெளிவந்துள்ளன.

இந்த முயற்சிக்கு சீனா கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது. வளர்ந்து வரும் நாடுகளின் கழுத்தை நெரிப்பது போன்ற வகையில் மேற்கத்திய நாடுகள் செயற்படுமேயானால் அவற்றிற்கு சரியான பதிலடி கொடுக்கப்படும் என சீனா எச்சரித்துள்ளது.

## யஸீர் அரபாத் இன்று கொழும்புக்கு வருகிறார்



கொழும்பு, மார்ச் 24

பலஸ்தீனவிடுதலை இயக்கத் தலைவர் யஸீர் அரபாத் இரண்டு நாள் உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டு இன்று கொழும்புக்கு வருகிறார்.

உயர் தூதுக்குழுஒன்றுடன் வருகை தரும் யஸீர் அரபாத் கொழும்பில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ஆகியோரைச் சந்திப்பார்.

இன்று மாலை 4 மணிக்கு கொழும்பு தாஜ் சமுத்திரா ஹொட்டேலில் அதிபர் அரபாத் விசேட சொற்பொழிவாற்றுவார்.

கடந்த 10 ஆண்டுகளின் பின்னர் பலஸ்தீனத் தலைவர் இலங்கைக்கு விஜயம் செய்கிறார். 1976 ஆம் ஆண்டு அணிசேரா நாடுகளின் உச்சி மாநாட்டில் கலந்து கொள்ள அவர் இலங்கைக்கு விஜயம் செய்தார்.

அரபாத்தின் விஜயத்துக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுவிட்டதாக கொழும்பில் அதிகாரிகள் தெரிவித்தனர். (ஐ)

## ஹெலியைத் தேடிக் கண்டு பிடிக்க நவீன ரக விமான உதவி தேவை

### பாதுகாப்பு வட்டாரங்களில் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 24

கடந்த புதனன்று முல்லைத்தீவு அலம்பில் பகுதியில் காணாமற்போன 'ரஷ்யத்' தயாரிப்பான எம். ஐ. 24 ரக ஹெலிக்கொப்ரரைத் தேடிக் கண்டு பிடிக்கும் முயற்சியில் வை—8 ரக போக்குவரத்து விமானம் ஒன்று ஈடுபடுத்தப்பட்டுள்ளது என்றும்—

காணாமற் போகும் வான்கலம் ஒன்றைத் தேடிக் கண்டு பிடிக்கக் கூடிய நவீன உபகரணங்களை [illegible] நவீன விமானம் ஸ்ரீலங்கா விமானப்படையினரிடம் இல்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி 'திவயின' பத்திரிகை இத் தகவலை வெளியிட்டிருக்கிறது.

காணாமற்போன ஹெலியைத் தேடிக் கண்டு பிடிக்கும் பணியில் வை—8 ரக போக்குவரத்து விமானத்தை ஈடுபடுத்துவதில் பயனில்லை.

இது ஒரு பாரதூரமான விடயமாக மாறியுள்ளது. ஹெலியைக் கண்டு பிடிக்க இந்திய விமானப்படையினரிடம் உள்ளது போன்ற ''ஷோனியர்'' ரகத்தைச் சேர்ந்த நவீன விமானங்களை கண்காணிப்பு பணியில் ஈடுபடுத்த வேண்டும்.

இவ்வாறு பாதுகாப்பு வட்டாரங்கள் கூறியுள்ளதாக அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. (ஐ-10)

## வடமராட்சியில் சணல் பயிர்ச்செய்கை

வடமராட்சி கிழக்கில் மண்ணின் வளத்தைப்பேண சணல் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் என்று கமநல சேவைத்திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஐ-31)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்மாதிரி ஆரம்பப் பாடசாலைகள் வடக்கு - கிழக்கில் அமைக்கப்படும்

நெடுந்தீவு, மார்ச் 24

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து கோட்டங்களிலும் அல்லது மாவட்டங்களிலும் குறைந்தது ஓர் முன்மாதிரி ஆரம்பப் பாடசாலையை உருவாக்க மாகாணக் கல்வி அமைச்சு திட்டமிட்டுள்ளது.

வட - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் திரு. சுந்தரம் டிவகலாலாவின் பணிப்புக்கமைய கல்விப்பணிப்பாளர் திரு. என். தணிகாசலம் ஆரம்பக் கல்விப்பட இணைப்பாளர் திரு. செ. டகேசு ஆகியோர் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

இது தொடர்பான ஏற்பாடுகளைக் கவனிக்கும் பொருட்டு விரைவில் இவர்கள் யாழ். மாவட்டத்துக்கு வருகை தரவுள்ளதாகத் தெரிய வருகிறது.

கடந்த 11 ஆம் திகதி வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களும் மன்னாருக்குச் சென்று அங்குள்ள ஆரம்ப வகுப்புப் பாடசாலைகளைப் பார்வையிட்டனர்.

முன்மாதிரி ஆரம்பப்பாடசாலைகளை உருவாக்கும் திட்டத்தின் கீழ் மன்னார் புனித சேவியர் பெண்கள் கல்லூரி ஆரம்ப வகுப்புக்களை இணைத்து முன்மாதிரி ஆரம்பப் பாடசாலையாக அதனைத் தெரிவு செய்தனர். (ஐ-111)

## வடமராட்சி கிழக்கு மீனவருக்கு உலர் உணவு விநியோகம்

வடமராட்சி கிழக்கில் பாதிக்கப்பட்ட மீனவருக்கான 5ஆவது, 6ஆவது கட்ட நிவாரணப் பொருள்கள் விநியோகம் இன்று திங்கட்கிழமை முதல் வழங்கப்பட உள்ளது.

செம்பியன்பற்று தொடக்கம் மணற்காடு வரையான பகுதிகளைச் சேர்ந்தோருக்கு வடமராட்சி கிழக்கு ப. நோ. கூ. சங்கத்தின் வல்லிபுரக் கோயில் கிளையிலும் —

மருதங்கேணி தொடக்கம் உடுத்துறை வரையான பகுதிகளைச் சேர்ந்தோருக்கு மருதங்கேணி கிளையிலும் உலர் உணவு விநியோகிக்கப் படும் என்று மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனையினர் அறிவித்துள்ளனர். (ஐ-36)

## துப்பாக்கியுடன் தலைமறைவு

கொழும்பு, மார்ச் 24

வவுனியாவில் இயங்கும் தமிழ்க்கட்சி ஒன்றின் உறுப்பினர் ஒருவர் ரி 81 ரகத் துப்பாக்கியுடன் தப்பி ஓடிவிட்டதாக வவுனியா பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்ட ஈ. பி. ஆர். எல் எவ். அமைப்பின் பிரமுகர் நடேச சிவசக்தி இந்த முறைப்பாட்டைச் செய்துள்ளார். (ஐ-3-150)


இன்று முதல் மீண்டும் சுன்னாகத்தில்!!!

யோகா போட்டோ & வீடியோ

ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதனை வாடிக்கையாளருக்கு அறியத்தருகிறோம்

★ வீடியோப் படப்பிடிப்பு
★ கலரிப் படப்பிடிப்பு
★ கறுப்பு/வெள்ளை அடையாள அட்டை படங்கள்
★ படம் பெருப்பித்தல்

தலைச்சோடனை நகை செற்,
புதிய திரைப்பட வீடியோ கசட்,
என்பன வாடகைக்குப் பெற்றுக்கொள்ளவும்,
கலர் பிலிம் கொழும்பில் பிரதியாக்கம் செய்து
பெற்றுக் கொள்ளவும் நாடுங்கள்...

யோகா போட்டோ & வீடியோ

78, காங்கேசன்துறை வீதி, சுன்னாகம்.
5 ஆம் கட்டை, கோப்பாய்.

(9425)



ஸ்ரீ கிருஷ்ணா சைவ உணவகம்

பல்கலைக்கழக
மாணவ, மாணவிகளுக்கும்
பொது மக்களுக்கும்
ஒரு நற்செய்தி

திருநெல்வேலி சென்றல் நேசிங்கோம் அருகில் 23 - 03 - 97 ஞாயிற்றுக்கிழமை உணவகத்தை ஆரம்பித்து வைத்துள்ளோம்.

ப. ராமதாஸ்
உரிமையாளர்

கம்பஸ் சந்தி,
பலாலி றோட்.

(45957)


## சைவ வித்தியா விருத்திச் சங்கம் சிறுவர் நிறைவாழ்வு இல்லம்

எமது சிறுவர் நிறை வாழ்வு இல்லத்தைப் புனரமைத்து, இயக்க ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

முதற் கட்டமாக எமது இல்லத்தில் தங்கி இருந்த 10 வயதுக்குட்பட்ட பிள்ளைகள் மட்டும் மீளச் சேர்க்கப்படுவர்.

10 வயதுக்குட்பட்ட பிள்ளைகளின் பெற்றோர்/பாதுகாவலரை எதிர்வரும் **97-04-10** ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணியளவில் எமது அலுவலகத்துக்கு வந்து பெயர்களைப் பதிவு செய்யுமாறு வேண்டுகிறோம்.

இச்சந்திப்புக்கு, பிள்ளைகளை அழைத்து வர வேண்டியதில்லை.

கலாசாலை வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

பேராசிரியர் அ. சண்முகதாஸ்
தலைவர்

சோ. பத்மநாதன்
செயலாளர்

(சி-369)

உ

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் தாது வருடம் பங்குனி மாதம் 11ஆம் நாள் இன்று (24-03-97) திங்கட்கிழமை காலை 9-26 மணி முதல் 10-20 மணி வரையுள்ள பூரணைத் திதியும் உத்தர நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய இடபலக்கின சுபமுகூர்த்த வேளையில்,

எமது சிரேஷ்ட புத்திரன்
கி. விஜயேஸ்வரன்
அவர்களுக்கும்

எமது ஏக புத்திரி
தெ. அகிலா
அவர்களுக்கும்

திருகோணமலை பிரதான வீதியில் அமைந்துள்ள ''பிருந்தாவனம்'' கல்யாண மண்டபத்தில் திருமணம் நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து ஏகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

★ இவ்வண்ணம் தங்கள் நல்வரவை விரும்பும் ★

திரு. திருமதி கிருஷ்ணானந்தன்
வாதரவத்தை, புத்தூர்
இல, 305, 346, கரும்புள்ளியான்,
வவுனிக்குளம்.

திருமதி அ. தெய்வேந்திரம்
திரு. திருமதி ம. பத்மநாதன்
உடுவில் தெற்கு,
சுன்னாகம்.

வரவேற்பாளர்கள்:


திரு. திருமதி செ. வரதராஜன்,
இல. 02, தபாற்கந்தோர் வீதி,
திருகோணமலை.

திரு. திருமதி க. மகேந்திரன்
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
திரு. ம. யோகநாதன் (புத்தளம்)
இல. 2, தபாற்கந்தோர் வீதி,
திருகோணமலை.

(45954) (இருவீட்டார் அழைப்பு)

## 32 ஆம் நாள் நினைவஞ்சலி

தாயின் மடியில்: 23 — 07 — 1922



இறைவன் அடியில்: 21 — 02 — 1997

### அமரர் கதிரவேலு சண்முகநாதன்

(ஓய்வு பெற்ற நெசவு மேற்பார்வையாளர்)

அன்பாலும் பாசத்தாலும்
அன்பைப் புகட்டிப் பண்பை வளர்த்து
சிரித்த முகத்துடனும் இனிய சொற்களாலும்
வழி நடத்தி நல்வாழ்வு தந்து
கருணாகரப் பெருமான் திருவடி சேர்ந்த
தலைவனே!
அன்று போல் என்றும் சிரித்த முகத்துடன்
எம்மை வழிநடத்தப் பிரார்த்திக்கின்றோம்.

- குடும்பத்தினர்

''அருளகம்''
உடுவில் கிழக்கு.

(9400)

உ
சிவமயம்

## யாழ். வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலய பூங்காவன திருவிழா இன்று 24-03-1997

காலை 9 மணிக்கு அம்பாள் எழுந்தருளி முன்மண்டபத்தில் தபசு
மாலை 1.30 மணிக்கு சந்திரசேகர் எழுந்தருளி மாலை மாற்றித் திருவீதிவலம்
மாலை 2.00 மணிக்கு [illegible] திருக்கல்யாணமும், திருவீதி வலமும்.
மங்கள இசை: [illegible] குழுவினர்

விழா உபயம்: சிவதொண்டன்.

(45960)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். நகரில் நான்கு இடங்களில் போசாக்கு புனர்வாழ்வு நிலையம்

## ஏப்ரல் முதல் இயங்கத் தொடங்கும்

யாழ்ப்பாணம், மார்ச் 24

தாய்மார்கள், குழந்தைகள், பள்ளி முன்னிலைச் சிறுவர்களின் போசாக்குக் குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் நோக்கில் யாழ். நகரில் நான்கு இடங்களில் போசாக்குப் புனர்வாழ்வுநிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

இலங்கை கிறிஸ்தவ சங்கங்களின் ஒன்றியத்துடன் இணைந்து யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினர் இந்த நிலையங்களை அமைக்கவுள்ளனர்.

இது தொடர்பாக யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ. தெய்வேந்திரன் விடுத்துள்ள பத்திரிகைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

எமது மக்கள் யுத்தநிலை காரணமாகப் பல சுகாதாரப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். அதில் தாய்மார், குழந்தைகள், பள்ளி முன்னிலைச் சிறார்களில் காணப்படும் போஷாக்கு குறைபாடு, இரத்தச்சோகை போன்றவையே முக்கியமானவையாகும். இதன் உடன் பிரதிபலிப்பும், நீண்ட காலத் தாக்கமும் எமது சமூகத்தைப் பாதிக்காவண்ணம் நடவடிக்கை மேற்கொள்வது அவசியமாகின்றது.

இதில் எமது சேவைக்கு உதவ அகில இலங்கை கிறிஸ்தவ (சிறுவர்களுக்கான) ஒன்றியம் முன்வந்துள்ளது. இந்திட்டத்தை எதிர்வரும்மூன்று ஆண்டுகளுக்கு நடைமுறைப்படுத்த திட்டமிட்டுள்ளோம். ஆரம்பத்தில் நகரின் நான்கு பகுதிகளில் போசாக்குப் புனர்வாழ்வு நிலையங்கள் ஏப்ரல் மாதம் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன. இந்நிலையத்தில் பகுதித் தாய்க்குலத்தின் பங்களிப்புடன் ஒவ்வொரு நிலையத்திலும் போசாக்கு நிலை பாதிப்புள்ள 50 சிறார்களுக்கும், 30 தாய்மாருக்கும் (கர்ப்பவதிகள், பாலூட்டும் தாய்மார்கள்) நாளாந்தம் தயாரிக்கப்பட்ட ஒரு வேளை உணவு வழங்கப்படும். அத்துடன் நிலையத்தினூடாகச் சுகாதாரக் கல்வி மற்றும் நோய்த்தடை நடவடிக்கைகள் மக்கள் பங்களிப்புடன் நடத்தப்படும்.

சரியான இடங்களைத் தேர்ந்தெடுப்பதற்கும் பயன்பெற வேண்டியவர்களை இனங் காண்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளோம். காலத்தின் தேவைக்கான இப்பணியில் எமக்கு உதவ விரும்பும் பொது ஸ்தாபனங்கள், சமூக நலன் விரும்பிகள் எமது காரியாலயத்தின் திட்டமிடல் பகுதியுடனோ, அல்லது எமது வெளிக்கள ஊழியர்களுடனோ தொடர்பு கொள்ள வேண்டப்படுகின்றனர்.

இத்திட்டம் நல்ல முறையில் செயல்பட்டு பயனளிக்கும் வகையில் இருந்தால் திட்டத்தைப் 12 நிலையங்களாகக் கூட்டவும் திட்டமிடப்பட்டுள்ளது — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-30-51)

# மன்னார் நகரில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம்

## ஜனாதிபதிக்கு எம்.பி கடிதம்

மன்னார் நகரில் கடந்த 19 ஆம் திகதி இரவு இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோக சம்பவம் குறித்து விசாரணை நடத்துமாறு ''புளொட்'' அமைப்பின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான த. சித்தார்த்தன் ஜனாதிபதியிடம் கோரியுள்ளார்.

கடந்த 19 ஆம் திகதி தொலைத் தொடர்பு நிலைப் பகுதி, சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் அலுவலகப் பகுதி ஆகியவற்றில் இருந்து சுமார் அரைமணித்தியாலம் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் தாயும் குழந்தையும் காயமடைந்தனர், பல வீடுகள் சேதமடைந்தன. அத்துடன் எமது அலுவலகத்தின் மீதும் சூடு வீழ்ந்ததில் கண்ணாடிகள் நொறுங்கின.

இந்த சம்பவத்தால் அங்கு மக்கள் மத்தியில் பதற்றமும், பீதியும் ஏற்பட்டுள்ளது. இந் நிலையை மாற்ற இது தொடர்பாக விசாரணை நடத்த வேண்டும் — என்று அவர் தெரிவித்துள்ளார்.

(ஐ-3-150)

# மன்னார் நகரப் பகுதி திடீர் சுற்றிவளைப்பு

மன்னார் நகருக்குள் விடுதலைப் புலிகள் ஊடுருவியுள்ளதாகக் கிடைத்த தகவலையடுத்து கடந்த வெள்ளிக்கிழமை நகரப்பகுதியை படையினர் சுற்றி வளைத்துத் தேடுதல் நடத்தியுள்ளனர்.

காலையில் ஆரம்பமான தேடுதல் நண்பகல் வரை நீடித்தது.

மன்னார் நகரில் இருந்து மக்கள் வெளியே செல்லவும் — வெளியில் இருந்து மக்கள் நகருக்குள் வரவும் — படையினர் தடை விதித்து பாரிய தேடுதலை மேற்கொண்டனர்.

நகர வாசிகள் சகலரும் பழைய பொலீஸ் நிலையப்பகுதிக்கு அழைக்கப்பட்டு கடும் சோதனைக்குட்படுத்தப்பட்டனர்.

இத்தேடுதல் காரணமாக கடைகள் அன்று மூடப்பட்டிருந்தன.

நகரை நோக்கி இரவு நேரங்களில் ஷெல் தாக்குதல் அடிக்கடி இடம்பெறுவதால் மக்கள் மத்தியில் அச்சமும், பதற்றமும் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.


## வைத்திய சேவையில் 25 வருடங்கள்

# இரெட்ணம் வைத்தியசாலை

**129, ஸ்ரேஷன் றோட், யாழ்ப்பாணம்.**

வைத்திய சேவையில் 25 வருடங்களை நிறைவு செய்யும் நாம், அன்றைய காலகட்டத்தில் தாம் பணி புரிந்த வைத்தியசாலைகளில் மருத்துவ விரிவுரைகளை வழங்கி எமக்கு அறிவூட்டிய வைத்திய நிபுணர்களை, வைத்திய நிபுணர்களுக்குத் தட்டுப்பாடு நிலவும் இவ்வேளையில், மனமாரப் பாராட்டி நிற்கின்றோம்.

கொழும்பு, லேடி றிச்வேயில் பணிபுரிந்த குழந்தைகள் வைத்திய நிபுணர் வாமதேவா (M. B. B. S, F. R. C. S, M. R. C. P) அவர்களுக்கும், றாகம வைத்திய சாலையில் பணிபுரிந்த பிரபல சத்திரசிகிச்சை நிபுணர் சேக்ஸ்பியர் (M.B.B.S,F.R.C.S, M.R.C.P.) அவர்களுக்கும், கொழும்பு காசல் ஆஸ்பத்திரி மகப்பேற்று மருத்துவ நிபுணர் ஞானப்பிரகாசம் மற்றும் ஜெகசோதி (M.B.B.S, F. R. C S, F.R.G.O.G.) அவர்களுக்கும், களுபோவில ஆஸ்பத்திரியில் கடமை புரிந்த (E. N. T.) மருத்துவ நிபுணர் திருமதி ஞானப்பிரகாசம் (M.B B S, F.R C S, M R.C.P. அவர்களுக்கும், மகரகம ஆஸ்பத்திரி வைத்திய நிபுணர் J. D. ஜெயதிலக மற்றும் பல வழிகளிலும் உதவிய வைத்திய கலாநிதிகள் பவாணி, அருணாசலம், சண்முகநாதன், வடிவேலு போன்றோர்க்கும்.

எமது நன்றியும் பாராட்டுக்களும்,

**வைத்திய கலாநிதி க. இராஜரெட்ணம்**

★ ★ ★

(1) குழந்தைகள் மருத்துவம்
(2) கண், காது, மூக்கு, தொண்டை (ENT.) மருத்துவம்.
(3) பல் கட்டுதல், பல் கிளீன் செய்தல், கிளிப் செய்தல், பல் மருத்துவம்
(4) கர்ப்பவதிகள் பரிசோதனையும், மருத்துவமும்
(5) வாதம் சம்பந்தப்பட்ட ரோகங்களுக்குரிய கரண்ட்பிடித்தல்
(6) சிறுநீர், இரத்தம், மலப்பரிசோதனைகள்
(7) இரத்த அழுத்தம், நாடித்துடிப்பு - ஒரே நேரத்தில்Digital Electronic Blood Pressure Monitor மூலம் பரிசோதனைகளும், ஆலோசனைகளும் இலவசம்.

# இரெட்ணம் வைத்தியசாலை

129, ஸ்ரேஷன் றோட், யாழ்ப்பாணம்.

(45952)


## வயோதிபரின் சடலம்

யாழ்ப்பாணம், மார்ச் 24

யாழ். முனியப்பர் கோயில் பகுதியில் அநாதரவான நிலையில் காணப்பட்ட வயோதிபர் ஒருவரின் சடலம் யாழ்ப்பாணம்பொலீஸாரால் நேற்று முன்தினம் இரவு யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

கொழும்புத்துறையைச் சேர்ந்த பஸ்தியாம் பிள்ளை மரியாம் பிள்ளை (வயது 73) என்ற வயோதிபரது சடலமே அது எனத் தெரிவிக்கப்பட்டது. பிரேத பரிசோதனைக்காக சடலம் ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டது.

(ஐ-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னியில் இருந்து வரும் குடும்பங்களுக்கு உலர் உணவு

## தென்மராட்சி செயலகம் நடவடிக்கை

தென்மராட்சி, மார்ச் 24

வன்னியிலிருந்து வந்து தென்மராட்சிப் பிரதேசத்தில் மீளக் குடியமரும் மக்களுக்கு மூன்று நாள்களுக்குள் நிவாரணப் பொருள்களை வழங்க பிரதேச செயலக புனர்வாழ்வுப் பிரிவினர் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

மீளக்குடியமரும் குடும்பங்கள் தமது பிரிவு கிராம அலுவலரிடம் தமது மீள்குடியமர்வை உறுதிப்படுத்திய கடிதத்தினை சமர்ப்பித்து நிவாரணப் பொருள்கள் பெறுவதற்கான அனுமதிப்பத்திரங்களை பிரதேச செயலகத்தில் பெற்று அந்தந்த ப. நோ. கூ. சங்கக் கிளைகளில் உணவுப்பொருள்களைப் பெற்றுக் கொள்ளலாமென பதில் பிரதேச செயலர் க. கேதீஸ்வரன் தெரிவித்தார்.

(ஐ-117)

# மீளக்குடியமர்வுக் கொடுப்பனவு பளைப் பகுதியில் விவரம் சேகரிப்பு

## வங்கி கணக்கு திறக்க முண்டியடிப்பு

பளைப் பிரதேசத்தில் உள்ளவர்களுக்கான மீளக் குடியமர்வுக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கான படிவங்களை பிரதேச செயலகத்தினால் நியமிக்கப்பட்ட குழுவினர் வீடு வீடாகச் சென்று பதிவு செய்யும் பணியை ஆரம்பித்துள்ளனர்.

இயக்கச்சி, கோவில்வயல், பேராலை, முகாவில் பிரிவில் ஊரணிப்பற்று கிராமம் தவிர்ந்த ஏனைய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்தோருக்கு படிவங்கள் பதிவு செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

குடியிருப்பாளர்கள் வங்கிக் கணக்கினை ஆரம்பித்து கணக்கிலக்கத்தை வழங்குமாறு கோரப்படுவதால் பளை கிராமிய வங்கியில் புதிய கணக்குகளை ஆரம்பிக்க பெருமளவு மக்கள் தினமும் முண்டியடித்த வண்ணம் உள்ளனர்.

(ஐ-117)

# பெரும்பாலான சிங்கள மக்கள் அரசியல் தீர்வை விரும்புகின்றனர்

## தேர்தல் முடிவு குறித்து சிவசிதம்பரம்

கொழும்பு, மார்ச் 24

பெரும்பாலான சாதாரண சிங்கள மக்கள் அரசியல் தீர்வு ஏற்பட வேண்டும் என்பதையே விரும்புகின்றனர். ஆளும் பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசின் தேர்தல் வெற்றி இதனையே காட்டுகிறது.

— தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் சிவசிதம்பரம் பி. பி. ஸிக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு தெரிவித்தார்.

அரசாங்கத்தின் அதிகாரப் பரவலாக்கல் தீர்வுயோசனை தொடர்பாக மிகவும் தீவிரமாக எதிர்ப்புப் பிரசாரங்களை மேற்கொண்டு வந்த மக்கள் ஐக்கிய முன்னணி தேர்தலில் படுதோல்வி அடைந்துள்ளது. ஒரு ஆசனத்தைக் கூட அவர்களால் கைப்பற்ற முடியவில்லை. இதிலிருந்து சாதாரண சிங்கள மக்கள் அரசியல் தீர்வையே விரும்புகின்றனர் என்பது தெளிவாகத் தெரிகிறது — என்றும் சிவசிதம்பரம் தெரிவித்தார்.

இந்தத் தேர்தலில் ஆளும் பொது மக்கள் ஐக்கிய முன்னணிக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி இறுதி நேரத்தில் ஆதரவு வழங்கியமை தெரிந்ததே.

(ஐ)

## பரிசுத்த வாரம்

**(1 ஆம் நாள் -திங்கள்)**

தவக்காலத்தின் உச்சநிலையே பரிசுத்தவாரம். அதன் ஆரம்பநாளில் ஆன்மீக ஆழத்தில் சிந்தித்து மனதைத் தூய்மைப்படுத்த அழைப்பு விடுக்கப்படுகிறது.

இயேசு தனது இறப்புக்கும், பிரிவுக்கும் முன்கூட்டியே அறிவிக்கிறார். உணர்வாயா? ''எனது அடக்க நாளைக் குறிக்கும்படி அவர்கள் இதை செய்யட்டும். ஏனெனில் ஏழைகள் உங்களோடு என்றும் உள்ளனர் நானோ என்றும் இருக்கப்போவதில்லை'' என்றுபணிவிடையைக் கண்டு முணுமுணுக்கும் கூட்டத்துக்கு சொன்னார்.

இன்று இருக்கும்போது ஏன் என்று கேட்காதோர், இறந்த பின்உரிமை கோருவதும்உறவுகள் எனத் தம்மை அறிமுகப்படுத்தி சொத்துக்கும், சுகத்துக்கும், தற்பெருமைக்கும் மரணச்சடங்குகளேபலவடிவமெடுக்கும் இக்காலத்தில், உன் எதிரிலே தெரியும் முதுமைகளின் விசும்பல்கள், பார்வைகள் எத்தனை உன்னை ஏக்கமுடன் நோக்குகின்றன. உணர்வாயா? தரிசிப்பாயா? உறவுகள் அல்ல என்று ஒதுக்கி விடுவாயா?

பிரியப்போகும்கிறிஸ்துவின் துயரம் உன்னைத் தொட்ட தாயின் அவர் வார்த்தையின் நற்செய்தியை ஊன்றி தியானிக்கும் நாளாகவும் அதனையே வாழ்விலும் கடைப்பிடிக்கும் காலமாகவும் இப்பரிசுத்த வாரத்தைபயனுள்ள தாக்கிக் கொள்வாயா?

—யோசப் பாலா

## நெடுந்தீவு கடற்கரையில் சடலம்

நெடுந்தீவு, மார்ச் 24

நெடுந்தீவு வெல்லைக் கடற்கரையில் இருந்து வயோதிபர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவு 4 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான வேலுப்பிள்ளை ஆலாலசுந்தரம் (வயது 46) என்பவரது சடலமே அது என்று உறவினர்களால் அடையாளம் காணப்பட்டது.

வீட்டில் இருந்து கடந்த 15 ஆம் திகதி புறப்பட்டுச் சென்ற இவர் திரும்பிவரவில்லை. பின்னர் உறவினர்கள் இவரைத் தேடுவதில் ஈடுபட்டிருந்தனர். அவ்வேளையிலேயே சடலம்கண்டுபிடிக்கப்பட்டது.

(ஐ-111)

## 1,914 தேர்தல் வன்முறைகள்

கொழும்பு, மார்ச் 23

உள்ளூராட்சித் தேர்தல் நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்ட தினத்தில் இருந்து கடந்த வியாழக்கிழமை வரை 1914 தேர்தல் வன்முறைகள் தொடர்பான முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் அமைப்பு தெரிவித்துள்ளது.

கடந்த 5 வாரங்களில் தேர்தல் தொடர்பாக இடம்பெற்ற மோதல்களில் 7 பேர் கொல்லப்பட்டுள்ளனர் எனவும் அந்த அமைப்பு தெரிவித்தது.

(இ-10)

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

National T.V (20'') வீடியோ டெக் (G 120), ஜெனரேட்டர்கள் யமகா (650w), Robin (1500w), Solar (40w), Stabiliser (1 KVA) விற்பனைக்குண்டு. ம. சுரேந்திரஜித், 183, சென்ஜேம்ஸ் ஒழுங்கை, யாழ்ப்பாணம்(தற்போதைய நீதிமன்ற முன்ஒழுங்கை). [45959]

### திருமண சேவை

துர்க்கா திருமணசேவை. எல்லா மதத்தவர்களும் தொடர்பு கொள்ளலாம். தொடர்பு: இல. 178, நாவலர் றோட், யாழ்ப்பாணம். [45951]

### தமிழ் தட்டெழுத்து

தமிழ் றெமிங்ரன் தட்டெழுத்து இயந்திரம் விற்பனைக்குண்டு. தேவைப்படுவோர், 31 - 03 - 97 ஆம் திகதிக்கு முன் அலுவலகத்தில்பார்வையிட்டு மேலதிக விவரங்களைப் பெற்றுக் கொள்ளவும். பொது முகாமையாளர், யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம். [சி/362]

### அக்கரைச் சீமையில்

அராலியூர் சுந்தரம்பிள்ளையின் நூல்கள்; அக்கரைச் சீமையில் நாவல் மலிவு விலை ரூபா 25/- நாடகம் எழுதுவது எப்படி? ஒரு நாடகமும் 22 கட்டுரைகளும் ரூபா 50/- பூபால சிங்கம் புத்தகசாலை. [45961]

## டிராக்டரில் தவறி விழுந்து காயம்

யாழ்ப்பாணம், மார்ச் 24

ஓடிக் கொண்டிருந்த உழவு இயந்திரத்தில் இருந்து தவறி விழுந்து சில்லுக்குள் நெரிந்து ஒருவர் காயமடைந்தார்.

நீர்வேலி இராச வீதிப்பகுதியில் நேற்றுக்காலை இடம் பெற்ற இச்சம்பவத்தில் புத்தூர் கிழக்கு வாதரவத்தையைச் சேர்ந்த கந்தசாமி சுந்தரவேல் (வயது 49)என்பவரே காயமடைந்தவராவர்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஐ-15)

# இதோ வந்துவிட்டன!

பெருந்தொகையாக

## இந்திய நாவல்கள் - டிக்ஷனறிகள்

நூல் நிலைய உரிமையாளர்கள் உடன் வரவும்..
தேவையானவற்றைத் தெரிவு செய்யவும்...
கொழும்பு பிரபல வெளியீடுகளான

★ பிறையிட் புத்தகங்கள் ★ வெற்றிக்கனிகள்

வெளி வந்துவிட்டன. சகல புத்தகங்களும் உண்டு.


**கொப்பி** வகைகள் - **CR** வகைகள் மற்றும்
**ஸ்ரேசனறி** சாமான்கள் மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

பிறந்த நாள் வாழ்த்துக்கள் எதுவானாலும் நாடுங்கள்:

★ **மக்மிலன் புத்தகசாலை**
★ **ஸ்ரீகாந் புத்தகசாலை**

இல. 3, பஸ்நிலையம், யாழ்ப்பாணம். (சி-361)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 11 — 06 — 1924 | 24 — 02 — 1997 |

அமரர்

## மயில்வாகனம் சுந்தரவினாயகம்

(இளைப்பாறிய D. O. A., நில அளவைத் திணைக்களம்)

கடந்த 24-02-1997 இல் சிவபதமடைந்த மயில்வாகனம் சுந்தரவினாயகம் அவர்களின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதோடு, 25-03-97 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி வைபவத்திலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறும் அன்புடன் அழைக்கிறோம்.

''நீங்கள் மறைந்து நாள்கள் மூபத்து ஒன்று சென்றன. ஆண்டவன் தன்னை அன்புடன் வேண்டினோம். அவனடி தன்னில் ஆறுதல் பெறுகவே''

சாந்தி! சாந்தி! சாந்தி!

மனைவி, பிள்ளைகள்.

கே. கே. எஸ். வீதி,
வல்வெட்டித்துறை.

(9404)

# ஆரம்ப விழா

யா/ புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலயம்

காலம்: **24—03—1997** திங்கட்கிழமை காலை10மணி மீண்டும் அதன் கல்விப் பணியைத் தொடர,
யாழ். வலயம் 1இன் கல்விப்பணிப்பாளர்
திரு. சு. இரத்தினராசா அவர்களினால் ஆரம்பித்து வைக்கப்படும்.

இந் நிகழ்வில் வித்தியாலய மாணவர்களையும், பெற்றோர்களையும், நலன் விரும்பிகளையும், சமுகம் அளிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்

(9426)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 11 — 01 — 1969 | 24 — 03 — 1996 |

## அமரர் வைத்தீஸ்வரர் ரவீந்திரன்

(யா/ விக்ரோறியாக் கல்லூரி ஆசிரியர்)

அன்பினாலும், பண்பினாலும் எம்மை ஆட்சி செய்து இடையில் எம்மையெல்லாம் துயரத்தில் ஆழ்த்திவிட்டு இறைவனடி சேர்ந்த உமது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரிய கழகம்,
யா/ விக்ரோரியாக் கல்லூரி, சுழிபுரம்.

(9399)

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## திருமதி நாகேஸ்வரி மதியாபரணம்

| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 16 — 07 — 1939 | 24 — 03 — 1994 |

பாசமென்ற நெய்யூற்றி பகலிரவாய்ப் பார்த்திருந்து
ஏற்றி வைத்த தீபம், நீ இடையினிலே
அணைந்து விட்டாய்!
நின்னுருவம் மறைந்தாலும் மூன்றாண்டு ஆனாலும்
உங்கள் நாமம் மறையாது.காலம் நூறு போனாலும்
எங்கள் பாசம் என்றும் மறையாது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கும்:

கணவர்: மதியாபரணம் (ஆசிரியர்)
பிள்ளைகள்: பாமினி, சுதாஜினி, பாலினி, ஷாமினி,
மருமக்கள்: சுரேஸ்குமார், விக்னராஜா
மற்றும் உற்றார், உறவினர்.

மயிலிட்டி தெற்கு,
கட்டுவன்,
தெல்லிப்பழை.

(9376)

# புதுக்கடைத்திறப்பு விழா

இன்று 24-03-97 திங்கட்கிழமை முற்பகல் 9-12 மணி
முதல் முற்பகல் 11-53 மணிவரை வரும் சுபவேளையில்,
**நாம் புதிதாக ஆரம்பிக்கவிருக்கும்**

## ★★ சரவணா களஞ்சியம் ★★

## SARAVANA STORES

**(பல்பொருள் வாணிபம்)**

நிறுவனத்துக்கு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
உங்களுக்குத் தேவையான நாளாந்த பாவனைப் பொருள்கள், பால்மா வகைகள், பிஸ்கற்வகைகள் மற்றும் கேக் தயாரிக்கும் பொருள்கள் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

356 (158), ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(45956)

தி. சீவரத்தினம்
உரிமையாளர்.

## யா/ வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம்

# பழைய மாணவர் சங்கம்

இப்பாடசாலைப் பொன் விழா இறுதி நிகழ்வு, மலர் வெளியீடு என்பவற்றைச் சிறப்பாகச் செய்யச் சங்கம் விரும்புகிறது. பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள், ஆர்வலர்கள் அனைவரும் **28 — 03 — 97** வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும் ஆலோசனைக் கூட்டத்திற்குச் சமுகந்தந்து ஒத்துழைப்பும் ஆதரவும் வழங்கும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

ந. ஜெயகுமாரன்
செயலாளர்.

(45946)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## நழுவிய நல்ல தருணம்

பெரும் குழப்பம், கலவரம் எதுவும் இல்லாமல் தென்னிலங்கையில் உள்ளூராட்சித் தேர்தல் ஒருவாறு நடந்து முடிந்து விட்டது. பதிவு செய்யப்பட்ட மொத்த வாக்காளர்களில் எழுபத்தேழு சத வீதத்தினர் தமது வாக்குரிமையைப் பயன்படுத்தி உள்ளனர். ஆயுதக் கலாசாரம் ஒரு புறத்தில் இருந்து பயமுறுத்திக்கொண்டிருந்த போதிலும். வாக்குரிமை மூலமான ஜனநாயகத்திலேயே சிங்களப் பொதுமக்கள் நம்பிக்கை வைத்துள்ளார்கள் என்பதனையும் வெள்ளிக்கிழமைத் தேர்தல் மிக வெளிச்சமாகக் காட்டுகிறது.

மொத்தமுள்ள 238 உள்ளூராட்சி சபைகளில் 194 இடங்களை ஆளுங்கட்சியான பொதுமக்கள் ஐக்கிய முன்னணி கைப்பற்றியுள்ளது. இது அரசாங்கத்துக்குக் கிடைத்த பெருவெற்றி என்பது உண்மையே. எனினும் அளிக்கப்பட்ட வாக்குகளில் ஐம்பது சத வீதத்துக்கும் குறைவாகவே ஆளுங் கட்சிக்குக் கிடைத்திருக்கிறது.

பொ.ம.ஐ. முன்னணி அரசின் இரண்டரை வருட ஆட்சியின் பின்னர் நடைபெற்ற இத் தேர்தலின் முடிவுகள், தென்னிலங்கை மக்களில் சுமார் அரைவாசிப் பேர் இன்னமும் ஆளுங்கட்சிக்கு ஆதரவாக உள்ளார்கள் என்பதனைப் புலப்படுத்துகிறது.

தேர்தல் முடிவுகள் தென்னிலங்கை மக்கள் அரசாங்கத்தின் மீது வைத்துள்ள நம்பிக்கையை உறுதி செய்கிறது. அரசின் திட்டங்களை, கொள்கைகளை, செயற்பாடுகளை மக்கள் அங்கீகரிக்கிறார்கள், ஆதரிக்கிறார்கள் என்பதனை வெளிப்படுத்துகிறது — இவ்வாறு அரச வட்டாரங்கள் மதிப்பீடு செய்வதும் ஓரளவு உண்மைதான்.

எனினும் இந்த நாட்டின் மிக முக்கிய விவகாரங்களான இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது, போரை நிறுத்துவது ஆகியனவற்றை அரசு உள்ளூராட்சித் தேர்தல் பிரசாரத்தில் மையப்படுத்தாமல் புறந்தள்ளி விட்டதால் —

அந்த இரு விடயங்களிலும் தென்னிலங்கை மக்களின் நிலைப்பாடு என்ன? அவர்கள் எங்கே நிற்கிறார்கள்? சமாதானத் தீர்வுக்கு எதிரான தீவிர வாதிகளின் உணர்ச்சி வசமான பிரசாரங்களுக்கு எடுபடுவார்களா? அல்லது சமாதானத் தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் உறுதியாக நிற்கிறார்களா? என்பதனை மதிப்பிட முடியவில்லை.

மக்கள் ஆதரவு எந்தப் பக்கம் உள்ளது? ஜனாதிபதி தேர்தலுக்குப் பின்னர், மக்கள் அரசு மீது வெறுப்படைந்துள்ளார்களா? என்பதனை நாடி பிடித்துப் பார்க்கும் பரிசோதனைத் தளமாகவே நடைபெற்று முடிந்த தேர்தல் களத்தை அரசு பயன்படுத்தியது.

அப்படியிருக்க அந்தத் தேர்தலின் போது, இனப் பிரச்சினை, போரை நிறுத்துதல் ஆகியன குறித்து தென்னிலங்கை மக்களின் கருத்தை அறிவதற்கு அரசு பின்னடித்தமை எந்த வகையிலும் ஏற்கக்கூடியதல்ல.

அவ்விடயங்கள் இரண்டும் தேர்தலில் முதன்மைப்படுத்தப்பட்டிருப்பின், அரசின் தீர்வு முயற்சிகளுக்கு மக்கள் பலம் சேர்த்ததாக இருக்கும். அதற்கான நல்ல தருணம் நழுவ விடப்பட்டு விட்டது. இது சிறந்த அரசியல் உத்தி அல்ல.

# தீர்வை ஐ.தே.க ஆதரிக்காவிடில் அரசுக்கு மாற்றுவழி உண்டு

### முஸ்லீம் காங்கிரஸ் எம்.பி தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 23

''அரசு முன்வைத்துள்ள தீர்வுத் திட்டத்தை ஐ.தே.க ஆதரிக்காவிட்டால் அரசுக்கு மாற்றுவழி உண்டு. நாடாளுமன்றத்தை அரசியல் நிர்ணய சபையாக மாற்றி, சாதாரண பெரும்பான்மையுடன் தீர்வுத் திட்டம் நிறைவேற்றப்படும்.''

இப்படி முஸ்லிம் காங்கிரஸ் தேசியப் பட்டியல் எம்.பியான சுபைர் தெரிவித்தார்.

இந்த அணுகுமுறையை அரசாங்கம் தவிர்த்து வருகிறது. ஐ.தே.கவின் ஆதரவுடனேயே தீர்வுத் திட்டத்தை நிறைவேற்ற அரசு விரும்புகிறது.

நாடாளுமன்றத்தை அரசியல் நிர்ணய சபையாக்கி அரசின் தீர்வுத் திட்டத்தை நிறைவேற்றும்போது மூன்றில் இரண்டு பெரும்பான்மை, கருத்துக் கணிப்பு என்பன போன்ற பிரச்சினைகள் எழா.

இந்த அணுகுமுறை கடைசியாக மேற்கொள்ளப்படும். 94 ஆம் ஆண்டு பொ.ஐ.மு. தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில், அரசியல் நிர்ணய சபை மூலம் புதிய அரசமைப்பை கொண்டு வருவோம் என்று மக்களிடம் ஆணை பெற்றிருந்தது.

இப்படி அவர் மேலும் கூறினார். (இ-3-150)

---

## நாளை

**பங்குனி 12**
செவ்வாய்க்கிழமை
திதி: பிரதமை
நண்பகல் 12.09வரை.
நட்சத்திரம்: அத்தம்.
பகல் 12.57வரை
சுபநேரம்: 10.45-12.15
ராகுகாலம்: 03.15-04.45
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

---

# தென்மராட்சி உடற்பயிற்சி போட்டி இன்று

சாவகச்சேரி, மார்ச் 24

தென்மராட்சிக் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையேயான உடற்பயிற்சிப் போட்டிகள் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இப் போட்டிகளில் 15 வயது, 19 வயதுப் பிரிவுகளைக் கொண்ட ஆண், பெண் அணிகள் பங்கு பற்றுகின்றன.

சாவகச்சேரி, கொடிகாமம் கல்வி வட்டாரப் பிரிவுகளிலிருந்து ஏற்கனவே நடத்தப்பட்ட போட்டிகளில் தெரிவு செய்யப்பட்ட அணிகளே இன்றைய உடற் பயிற்சி போட்டிகளில் பங்குபற்ற உள்ளன. (ஐ-31)

---

# பி.சீ.ஜி. தடை மருந்தை பெறுவதால் காசநோய் இலகுவில் குணமாகும்

உலக காசநோய்த் தினம் இன்றாகும். இதனை ஒட்டி யாழ். பிராந்திய காசநோய் கட்டுப்பாட்டு அதிகாரி வைத்திய கலாநிதி சி. இந்திரராஜா எழுதிய கட்டுரை இங்கே பிரசுரமாகியுள்ளது.

காசநோய் ''மைக்கோபட்டீரியம் ரியூபகுலோசிஸ்' (Mycobacterium Tuberculosis) என்னும் பக்ரீரியாவால் ஏற்படுகின்றது. இந்த பக்ரீரியாவை மனித ''ரியூபக்கிள்'' என்றும் பொதுவாகக் கூறலாம்.

''ரியூபக்கிள் பசிலஸ்'' தொற்று ஏற்பட்டநோயாளியின் சளி அல்லது எச்சிலில் மனித ரியூபக்கிள் காணப்படுகிறது. இந்த ''பசிலஸ்'' புத்தகத்துள் அல்லது படுக்கையில் மூன்று முதல் ஆறு மாத காலம் வரை உயிருடன் இருக்கும்.

மிருக இன ''ரியூபக்கிள்'' பசிலஸ் மிகவும் அருமையாகவே காணப்படுகிறது. வளர்ப்பு நாய்கள், பூனைகள், மனித இனத்தில் இருந்து சிலவேளை அவை தொற்றினைப் பெறுதல் கூடும். இந்த பக்ரீரியாக்கள் அதிகமாகத் தொற்று உள்ள ஒரு நோயாளியின் நுரையீரல்களில் காணப்படுகின்றன. இவரிடமிருந்து எச்சிலின் துளிச்சிதறல்கள் (Droplets) மூலம் நோய் பரவுகின்றது.

ஒரு தொற்று ஏற்படுத்தக்கூடிய நோயாளி இருமும் போது எச்சில் துளிச் சிதறல்களுடன் பக்ரீரியாக்கள் வெளிவந்து காற்றில் உள்ள தூசியுடன் சேர்ந்து கொள்ளும், பின்பு நிலத்தில் படிந்து உலர்ந்து இருக்கும். ஒரு சுகதேகி சுவாசிக்கும் போது காற்றில் உள்ள தூசியுடன் கூடிய இந்த பக்ரீரியாக்கள் நுரையீரலுள் செல்கின்றன. அல்லது தொண்டையுள் தங்கிவிடுகின்றன. இவை தொண்டையுள் தங்க நேர்ந்தால் மூன்று, ஆறு மாதங்களின் பின் - கழுத்து நிணநீர்ச் சுரப்பி அழர்ச்சி காசரோகம் ஏற்படுகிறது.

### மூளையையும் தாக்கும்

இந்த பசிலஸ்சுகள் நுரையீரலுள் சென்றால் மூன்று அல்லது பல வருடங்களுக்குப் பின்பு இவை நுரையீரல்களைத் தாக்கும். இவை சில வேளைகளில் நுரையீரலில் இருந்து மூளைக்கும், எலும்புக்கும், சிறுநீரகத்துக்கும், குடலுக்கும், பால் உறுப்புக்கும் பரவுதல் கூடும்.

பீ.சீ ஜீ. (B.C.G.) தடை மருந்தைப் பெற்றுக் கொள்வதன் மூலம் இத்தகைய பரந்துபடும் தொற்றைத் தவிர்க்க முடியும். ஒரு சமூகம் பி,சீ.ஜி தடை மருந்தை முற்று முழுதாக ஏற்றுக் கொள்வதன் மூலம் இச்சமூகத்திற்கு ஏற்படக் கூடிய காசநோயில்85 விகிதத்தைத் தடுக்க முடியும்.

ஒருவர் உரிய இடத்தில் கைக்குட்டையைப் பாவிப்பதன் மூலம் மூக்கு ஊடாக ''ரியூப்பக்கிள் பசிலஸ்'' உட்செல்வதைத் தவிர்க்க முடியும். மேலும் நோயாளர் இருமும் போது கைக் குட்டையைப் பாவிப்பார்களேயானால் இந்நோய் வேறு எவருக்கும் தொற்றவாய்ப்பு இல்லை. ஒரு காச நோயாளியிடமிருந்து மூன்று அடி தூரத்தில் இருப்பதன் மூலம் துளிச் சிதறல் மூலம் தொற்று ஏற்படக்கூடிய சந்தர்ப்பம் குறைவு. எல்லா இடங்களிலும் கண்டபடி துப்புதல், மண்டபங்கள் (திருமண, மரண) வாசல்களில் துப்புதல் கவனத்தில் கொள்ள வேண்டிய முக்கிய விடயமாகும்.

### கண்ட இடங்களில் துப்பும் பழக்கம்

இங்கிலாந்தில் 1875ஆம் ஆண்டிலேயே வீதியில் துப்புபவர்களுக்கு 5 பவுண் அபராதமாக விதிக்கப்பட்டது. அந்த நாட்டில் இந்த அணுகுமுறையில் காசநோய்க் கட்டுப்பாடு மேற்கொள்ளப்பட்டது. ஆனால் எமது நாட்டிலோ இன்றும் கூட மக்கள் கண்ட இடங்களில் துப்பும் பழக்கம் உடையவர்களாக உள்ளனர்.

காசநோயின் குணங்குறிகளைக் கவனிப்போம்.

நோயாளிக்குக் காய்ச்சல் காணப்படும். இருமல், நிறை குறைவு, களைப்பு, பசி இன்மை, சிலருக்கு நெஞ்சு நோ, ஆஸ்த்துமா, வயிற்று நோ, முள்ளந்தண்டு பாதிக்கப்பட்டால் கால்கள் வழங்காமை, சிறுநீரகம் தொடர்புபடும்போது முதுகுப்புறம் நோ, பால் உறுப்புகள் பாதிக்கப்படும்போது மலட்டுத்தன்மை ஏற்படும். நீண்டகால நோயாளர்களுக்கு சில வேளை குரல்மாற்றம், கரகரத்த குரல், அடக்க முடியாத [illegible] நோயாளரின் இருதயம் பாதிப்பு அடையும். இறுதியாக இவர்கள் இருமும்போது இரத்தம் வரும். இந்நிலை நோயின் தொடக்கத்தில் அல்லது இறப்புக்குக் காரணமாகவும் இருப்பது உண்டு.

### நோயாளியை கண்டுபிடிப்பது எப்படி?

நாங்கள் ஒரு புதிய நோயாளியைக் கண்டுபிடிக்கும்போது வேறு ஒரு கண்டுபிடிக்கப்படாத நோயாளி இருக்கிறார் என்பதை நினைவில் கொள்ளுதல் வேண்டும். இந்த நோயாளியைக் கண்டுபிடிப்பது எப்படி?

நோய் வளர்ச்சியடைய நோயாளியின் எச்சிலில் பசிலஸ்கள் காணப்படும். எம்மைப் போன்ற அபிவிருத்தியடையும் நாடுகளில் எச்சில், சளிப் பரிசோதனை மூலம் கணிசமான அளவு நோயாளரைக் கண்டுபிடிக்கலாம். சுகாதாரப் பகுதியினர் — நோயைப் பலருக்குப் பரப்பக்கூடிய இத்தகைய நோயாளரை இனங்காண்பதில் தான் அதிக கரிசனை காட்டுகிறார்கள். சகல நோயாளரையும் ''எக்ஸ்றே'' கதிர் பரிசோதனை மூலம் இனங் காண்பது சாத்தியமற்றது ஆகும்.

உதாரணமாக கொடிகாமத்தில் இருக்கும் ஒருவர் சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையில் தனது எச்சிலைப் பரிசோதித்துக் கொள்ளலாம். அங்கு கண்டுபிடிக்கப்படாதவிடத்து யாழ்ப்பாணம் மார்புநோய் சிகிச்சை நிலையத்தில் எக்ஸ் — கதிர்ப் பரிசோதனை மூலம் இனங்காணலாம். ஆகவே இரண்டு கிழமைகளுக்கு மேல் இருமல் உள்ள எவரும் தங்களுக்கு அண்மையிலுள்ள அரசாங்க வைத்திய நிலையத்தில் எச்சில் பரிசோதனை செய்வித்து அறிந்து கொள்ளுதல் வேண்டும்.

1996 ஆம் ஆண்டு — காசநோய் அறிகுறிகளுடன் முதல் முறையாக வந்தவர்களில்12சதவீதமானோர்காசநோய் உடையவர்கள் எனக் கண்டறியப்பட்டனர். இவர்களில் 60 சதவீதமானோர் எச்சில் பரிசோதனை மூலம் நுரையீரல் காசநோயாளராக இனங் காணப்பட்டனர். அதாவது அறிகுறிகளுடன் வந்தவர்களில் 5 சதவீதமானவர்கள் எச்சில் பரிசோதனை மூலம் காசநோய் உடையவர்கள் எனக் கண்டுபிடிக்கக் கூடியதாக இருந்தது. இந்த அளவில் நோயாளர் உள்ளமை கவலை தருவதாகும்,

நோய் அறிகுறிகள் உள்ளவர்கள் அண்மையிலுள்ள அரச வைத்திய நிலையங்களுக்குச் சென்று பரிசோதனைசெய்வித்து உரிய நடவடிக்கைகளை எடுக்காது விடின் நோய் வேகமாகப் பரவும்.

எமது பகுதியில் இந்நோய்க்கான போதியளவு மருந்து உண்டு, 20 சத வீத நோயாளர் அசட்டை காரணமாக உரிய முறையில் மருந்து எடுப்பதில்லை. ஒரு காசநோயாளிக்கு ஒரு தடவை ஒருமாதத்துக்குத் தேவையான மருந்து கொடுக்கப்படுகிறது. மார்புநோய்ச் சிகிச்சைநிலையத்துக்கு வந்து எடுக்கமுடியாத ஒருவர் உறவினர் ஒருவர் மூலம் இவரது மருந்தைப் பெற்றுக்கொள்ளலாம். ஒரு நோயாளி தனது நோயைக் குணப்படுத்த தொடர்ந்து 9 மாதமாவது மருந்து எடுக்க வேண்டும்.

கடந்த வருடம் கண்டுபிடிக்கப்பட்ட நோயாளரிடையே இறப்பு விகிதம் 5: 4 ஆக இருந்தது - நோயாளர் நோய் மிகவும் முற்றிய பின்பே சிகிச்சைக்கு வருவது தான் இத்தகைய அதிர்ச்சி தரும் இறப்பு விகிதம் உண்டாவதற்குக் காரணமாகும்.

இந்நோய் வருவாய் குறைந்த மக்கள் மத்தியில் அதிகம் காணப்படுகிறது. 85 சத வீத நோயாளருக்கு சமூக சேவைத் திணைக்களம் மூலம் உதவிப் பணம் கிடைக்கிறது.

### குணப்படுத்தக் கூடியது

காசநோய் குணப்படுத்தக் கூடியது என்பதை நாம் எல்லோரும் மனதில் கொள்ள வேண்டும். புற்றுநோய், இருதயநோய் போன்றவற்றில் அல்லாமல் நுரையீரலுக்கு பிற்காலப் பாதிப்பு இன்றி இந்நோயைக் குணப்படுத்தலாம்.

இரண்டு வாரத்துக்கு மேற்பட்ட இருமல் உள்ள ஒவ்வொரு சமூகப் பொறுப்புள்ள அங்கத்தவரும் தமக்கு அண்மையிலுள்ள அரச வைத்திய நிலையத்துக்கு பரிசோதனைக்குச் செல்ல வேண்டும், அல்லது அங்கிருந்து மேல் நடவடிக்கைக்காக மார்பு நோய் சிகிச்சை நிலையத்திற்கு அனுப்பப்பட வேண்டும். இந்த முறையில் மாத்திரம் தான் ஒவ்வொரு மனிதனையும் இந்தப் பயங்கர நோயிலிருந்து காப்பாற்ற முடியும் அருகி வருகின்ற யாழ்ப்பாண மக்களைக் காப்பாற்றவும், ஒவ்வொருவரும் சுகமாக வாழவும் முடியும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர்

## தெல்லிப்பளை

# புனர் வாழ்வு நிலையம் ஒரு மாதத்தில் இயங்கும்

### ஆணையாளர் நாயகம் தெரிவிப்பு

''தெல்லிப்பளையில் இயங்கிய புற்றுநோய் அஸ்பத்திரி வளவில் ஒருமாத காலத்தில் புனர் வாழ்வு நிலையம் இயங்க ஆரம்பிக்கும்.''

இவ்வாறு புனர் வாழ்வு ஆணையாளர் நாயகம் திருமதி குமாரி நவரத்தினம் தெரிவித்தார்.

புனர்வாழ்வுநிலைய கட்டட வேலைகள் துரிதமாக நடைபெறுகின்றன. விரைவாக வேலைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

கட்டட வேலைகளுக்காக 50 இலட்சம் ரூபா உடன் ஒதுக்கப்பட்டுள்ளது.

அந்த நிலையப்பகுதியைச் சுற்றி தற்சமயம் உயரத்துக்கு மதில் கட்டப்பட்டுவருகிறது.

இந்த புனர்வாழ்வு நிலையத்தில் 75 பேர் தடுத்து வைக்க வசதி உள்ளது.

இப்படி அவர் மேலும் கூறினார்.

குடா நாட்டில் கைது செய்யப்படுவோரை தெற்கே அனுப்பாமல் இங்கேயே தடுத்து வைக்க முடிவு செய்யப்பட்டிருப்பது தெரிந்ததே. (இ-3-150)

## வவுணதீவு...

(முதலாம் பக்கத் தொடர்)

மட்டக்களப்பு விமான தளத்துக்கு சென்று வருகிறது.

வவுணதீவுப் பகுதியில் புலிகளின் தாக்குதலை எதிர்த்து தாக்குதல் நடத்த தயார் நிலையில் இந்தப் படையணி தயாராகவுள்ளது என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன — என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

## வீரவில..

(முதலாம் பக்கத் தொடர்)

வாழ்வு நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டு அவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கப்பட்டு வருகிறது.

அவர்கள் 18 வயதுக்கும் 45 வயதுக்கும் இடைப்பட்டவர்களாவர்.

அவர்களில் வீரவிலவில் உள்ளவர்களில் 24 பேர் திருமணமானவர்கள் எனத் தெரியவந்துள்ளதால் அவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்று அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (இ-3-150)

## உரிமத் தகடு

வடமராட்சி, மார்ச் 24

பருத்தித்துறை நகரசபை இவ்வாண்டுக்கான சைக்கிள் உரிமத் தகடுகளை வழங்கி வருகிறது. (இ-173)

## உள்ளூராட்சித் தேர்தலின் போது

# வெளிநாட்டு கண்காணிப்பாளரை அரசாங்கம் அழைக்காதது ஏன்?

கொழும்பு, மார்ச் 24

தெற்கில் நடந்த உள்ளூராட்சித் தேர்தல்களைக் கண்காணிக்க வெளிநாட்டவர்களை அழைக்க இலங்கை அரசாங்கம் விரும்பாதமைக்கு காரணம் என்ன என்பது குறித்து தற்போது தகவல் வெளிவந்துள்ளது என்று ''சண்டே ரைம்ஸ்'' செய்தி வெளியிட்டுள்ளது.

தெற்குத் தேர்தல்களில் வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் அழைக்கப்பட்டிருந்தால், விரைவில் நடக்கவிருக்கும் வடக்கு — கிழக்கு தேல்தலுக்கும் வெளிநாட்டு கண்காணிப்பாளர்களை அழைக்க வேண்டிய கட்டாய நிலை ஏற்படும்.

அப்படி அவர்களை அழைத்தால் வீணாக சங்கடங்களில் அரசாங்கம்மாட்டிக்கொள்ள நேரிடலாம் என்று அப்பத்திரிகை மேலும் தெரிவித்தது.

(இ-3-150)

# கூட்டுறவுத்துறைக்கு ஏற்பட்ட சேதங்கள் திரட்டப்படுகின்றன

திருநெல்வேலி, மார்ச் 24

யுத்தகால அனர்த்தங்களின் போது யாழ். மாவட்டத்திலுள்ள கூட்டுறவு அமைப்புகளுக்கு ஏற்பட்ட பாதிப்புகள், இழப்புகள், சேதங்கள் ஆகிய விவரங்கள் யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பணிமனையினால் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

இந்த விவரங்கள் திருகோணமலையிலுள்ள வடக்கு—கிழக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளருக்கு விரைவில் அனுப்பி வைக்கப்படும்.

இதேவேவை யாழ். மாவட்டதில் கூட்டுறவுப் பரிசோதகர்களுக்கு பெரும் பற்றாக்குறை நிலவுகின்றது. 120 கூட்டுறவுப் பரிசோதகர்கள் இம் மாவட்டத்தில் கடமையாற்ற வேண்டிய இடத்தில் தற்போது 36 பேரே கடமையாற்றி வருவதாகவும் 84 பேருக்கு வெற்றிடம் இருப்பதாகவும் அடுத்து வரும் மூன்றாண்டு காலத்தில் இந்த வெற்றிடங்களை நிரப்பக் கூடிய சாத்தியக் கூறுகள் இருப்பதாகவும் யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ். கே. சண்முகநாதன் தெரிவித்தார்.

தமது கூட்டுறவு திணைக்கள பணிமனையிலும் ஆளணி பற்றாக்குறை நிலவி வருவதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை கூட்டுறவு திணைக்களமும் மாவட்டக் கூட்டுறவு சபையும் இணைந்து கூட்டுறவு கல்வி விரிவாக்கம் தொடர்பான திட்டம் ஒன்றைத் தயாரித்துள்ளனர். (இ-135)

## இ. தொ. கா. ஏன்...

(முதலாம் பக்கத் தொடர்)

விரும்பவில்லை.

எமது கட்சியின் சின்னத்தில் போட்டியிட்ட சிங்களவர்களுக்கு வாக்களிக்கவும் தமிழர்கள் முன்வரவில்லை.

இப்படி அவர் கூறினார்.

இதற்கிடையில் பதுளை, நுவரெலியா மாவட்டங்களில் ஐ. தே. க. வெற்றி பெற்றதன் மூலம் தொண்டமான் இன்றி அவரது ராஜதானியை ஐ.தே,க. வால் வெற்றி கொள்ள முடியும் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது என்று கொழும்பு அரசியல் வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டது. (இ-3-150)

## கணேசலிங்கம்...

(முதலாம் பக்சத் தொடர்)

டிருந்தால் வெற்றி கிடைத்திருக்கும் என்று அரசியல் வல்லுநர்கள் சுட்டிக்காட்டுகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கணேசலிங்கத்தை மேயராக்குவோம் என்று அரசு பகிரங்கமாக அறிவித்ததும் தோல்விக்குக் காரணம் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது — (இ-150-3)

## காணாமற்போன...

(முதலாம் பக்கத் தொடர்)

சுத்திகரிப்பு நிலையம் ஆகிய முக்கிய இலக்குகளையும் அவர்களால் தாக்க முடியும்:

காணாமற்போயுள்ள ஹெலியில் ஜே. என். மலலசேகரா என்ற விமானியும், உக்கிரைன் நாட்டவர்களான ஒரு விமானியும்,ஒரு பிளைட் என்ஜினியரும் இலங்கை விமானி ஒருவருமாக 4 பேர் இருந்தனர். அத்துடன் விடுமுறையில் சென்ற விமானப் படையைச் சேர்ந்த சிலரும் இருந்தனர்.

**புலிகள் சுட்டிருக்க முடியாது**

இந்த ஹெலியை விடுதலைப் புலிகள் சுட்டு வீழ்த்தினரா என்ற சாத்தியம் குறித்து ஆராயப்பட்டது.

தரையில் இருந்து பலமைல் தூரத்தில் கடலுக்குள் சென்று கொண்டிருந்த ஹெலியை புலிகள் சுட்டு இருக்கமுடியாது. அப்படி அவர்கள் சுட்டிருந்தாலும், முன்னே சென்ற ஹெலிக்கு அது தெரியவந்திருக்கும். ஏவுகணை கொண்டு தாக்கியிருந்தால், அதன் அதிர்வில் முன் சென்ற ஹெலியும் பாதிக்கப்பட்டிருக்கும்.

புலிகள் ஹெலியை சுட்டு வீழ்த்தியிருந்தால் அவர்கள் உரிமை கோரியிருப்பார்கள். இதுவரை புலிகள் ஹெலியைச் சுட்டதாக உரிமை கோரவில்லை.

**கடலில் விழுந்தால் மிதந்திருக்கும்**

ஹெலியின் இயந்திரம் செயல் இழந்து ஹெலி கடலில் வீழ்ந்திருக்கலாம் என்ற சாத்தியப்பாடு பற்றியும் ஆராயப்பட்டுள்ளது.

கடலில் வீழ்ந்திருந்தால் ஹெலியின் சில பாகங்கள் கடலில் மிதந்திருக்கும், சடலங்கள் கூட மிதக்கவில்லை. விமானிகளின் உயிர்காப்பு ஜாக்கெட்டுக்கள் மிதந்திருக்கும்.

ஹெலியின் உதிரிப் பாகங்களோ, எண்ணெய் படிவோ கடலில் காணப்படாததால் கடலில் வீழ்ந்ததற்கான அடையாளமே இருக்கவில்லை.

ஹெலி காணாமற் போன நேரத்தில் இருந்து 6 மணித்தியாலங்கள் விமானப் படையும், கடற்படையும் கடற்பகுதியில் தேடுதல் நடத்தியுள்ளன. தொடர்ந்து இரு நாள்களாக இத் தேடுதல் நடந்தது இப்போதும் தேடுதல் தொடர்கின்றது.

ஆனால் இதுவரை எந்தவித தடயமும் கிடைக்கவில்லை.

இந்தஹ் ஹெலி தரையில் மோதியிருந்தால் விமானப் படையினர் அதைக் கண்டு பிடித்திருப்பார்கள் — பெரிய உருவமான அந்தக்ஹெலியை கண்டுபிடிப்பது சுலபமாகும்.

**சேதமடையாது தரை இறங்கி இருக்கலாம்**

இந்தக் ஹெலி காணாமற் போனமைக்கு இன்னொரு சாத்தியமும் உள்ளது. தரையில் மோதி நொறுங்காமல், பாதுகாப்பாக சிறு சேதத்துடன் தரையிறங்கியிருக்கலாம். நொறுங்காமல் உருப்படியாக தரையிறங்கியும் இருக்கலாம் என்ற சாத்தியத்தை நிராகரிக்க முடியாது.

தொழில் நுட்பககோளாறு காரணமாக இந்தக் ஹெலி தரையிறங்கியிருந்தால், முன்னே சென்ற ஹெலிக்கு 'சிக்னல்' கொடுத்திருப்பார்கள். அந்த 'சிக்னல்' வழங்கிய இடத்தில் தேடிக்கண்டு பிடித்திருக்கலாம்.

**வெளிநாட்டு விமானிகள் மீது சந்தேகம்**

இந்தக் ஹெலி தரையிறங்கியமைக்கு இன்னொரு அபாயகரமான சாத்தியமும் உண்டு, அந்த சாத்தியம் பற்றி அறியும் பொறுப்பு இது பற்றி விசாரிக்கும் அதிகாரிகளிடம் விடப்பட்டுள்ளது.

அந்தக் ஹெலி எதிரியின் பிரதேசத்தில் தரையிறக்கப் பட்டிருக்க வேண்டும். பின்னர் புலிகள் அதை மறைத்து வைத்திருக்கலாம்.

இது எப்படி நடந்திருக்கலாம் என யாவரும் கேட்கலாம். அதற்கும் சாத்தியம் உண்டு.

இலங்கை விமானப் படையின் விமானிகளை புலிகள் தமது கைகளில் சிக்க வைக்க முடியாது.

இந்த ஹெலியில் இருந்த இரு வெளிநாட்டவர்கள் குறித்து விமானப்படையின் தலைமைப் பீடம் சிந்திக்க தவறிவிட்டது. அவர்கள் இந்தக் ஹெலியை கடத்தி தாம் விரும்பிய இடத்தில் தரையிறக்கியிருக்கலாம்.

கூலிப்படையான அந்த விமானிகள் பணத்துக்காகவே பணி புரிபவர்கள். தேசபக்தியாலோ, இலங்கை மீது கொண்ட பற்றினாலோ அவர்கள் அரச படையில் சேர்ந்து பணி புரியவில்லை. வெறும் பணத்துக்காகவே அவர்கள் பணிபுரிகிறார்கள்.

இதன் அர்த்தம், கூடுதலான பணத்தை வீசுபவர்களால் கூலிப்படையினரை விலைக்கு வாங்கி விடலாம். புலிகள் அவர்களுக்கு ஆயிரக் கணக்கில் டொலர் காசைக் கொடுத்து ஹெலியை தரையிறக்கியிருக்கலாம் என்ற சாத்தியப்பாட்டை நிராகரிக்க முடியாது.இது நடக்கக் கூடிய சாத்தியம் உண்டு.

இலங்கை ஒரு வறியநாடு. கூடுதல் பணத்தை கூலிப் படையினருக்கு கொடுக்க முடியாது. கூடுதல் பணத்தை கொடுத்து அவர்களை விலைக்கு வாங்கியிருக்கலாம்

சர்வதேச அமைப்புக்கள் மூலம் அவர்களுக்கு கூடுதல் பணம் வழங்கப்பட்டிருக்கலாம் என்பதற்கு சாட்சியம் இல்லாவிட்டாலும்,இலங்கை விமானிகளிடம் இருந்து பிஸ்டல்களைப் பறித்து, பின்னர் அதைத் தரையிறக்கியிருக்கலாம்: புலிகளும் குறிப்பிட்ட இடத்தில் நின்று அதை வெளியில் தெரியாமல் மூடியிருக்கலாம்.

இது தொடர்பான சாத்தியமான விசாரணைகள் நடத்தப்பட வேண்டியது அவசியம்.

இப்படி அந்தக்கண்ணோட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ- 3- 150)

## ஆயுதங்களுடன்...

(முதலாம் பக்கத் தொடர்)

தப்பட்டுள்ளது.

கைதானவர்களில் பெரும்பாலானவர்கள் பர்மியப் பிரஜைகள், சிலர் இந்தியர்கள்.

அவர்கள் கப்பலில் உள்ள ஆயுத விவரங்களை வெளியிட மறுத்து விட்டனர்.

எனினும்ஆயுதக்கப்பலுக்கு என்ன நடந்தது என்பது பற்றிய விவரம் எதுவும் தெரிவிக்கப்படவில்லை-

ஐரோப்பிய நாட்டிலிருந்து புறப்பட்ட ஆயுதக் கப்பலும் அந்தமான் கடலில் கைது செய்யப்பட்ட சிப்பந்திகளை பயணம் செய்த கப்பலும் ஒன்று தானா, வெவ்வேறானவையா என்பதும் தெரியவரவில்லை.

விடுதலைப்புலிகளுக்கு ஆயுதங்களை ஏற்றிக் கொண்டு கப்பல் ஒன்று இலங்கை நோக்கி வந்து கொண்டிருக்கிறது என்று செய்தியை 'சண்டே லீடர்' ஆங்கில வாரப் பத்திரிகை வெளியிட்டுள்ளது. [அ-3-150]

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### வில்சன் நிக்கலஸ் ஞானசூரியர்

24-03-1993 அன்று கிளாலிக் கரையில் எம்மை விட்டுப் பிரிந்த எமது நண்பன்

**வில்சன் நிக்கலஸ் ஞானசூரியர்**

(14 ஆம் அணி, யாழ். மருத்துவபீடம்)

அவர்களின் 4 ஆம் ஆண்டு தினத்தை நினைவு கூருவதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

**14 ஆம் அணி நண்பர்கள், யாழ். மருத்துவபீடம்.**

(45969)

சாவகச்சேரியில், மற்றுமொரு சேவையை மக்களுக்கு வழங்குவதில் பூரிப்படைகின்றோம்.

★ தரமான நிழற்படபிரதிகள்- (PHOTO COPYING)
★ மருந்துவகைகள்
★ பாடசாலை உபகரணங்கள்
★ கொழும்பு மென்பானங்கள் (குளிரூட்டியது)

மற்றும் குறோசரி பொருள்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

**அம்பாள்**

**பார்மஸி அன்ட் குறோசறி**

இல. 1, நவீனசந்தைக் கட்டடம், சாவகச்சேரி.

(சி/360)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, [illegible] இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24 - 03 - 1997 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org